# நடுகல் அகழ்வைப்பகம்

## (தருமபுரி கையேடு)


பதிப்பாசிரியர்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப.,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

ஆசிரியர்

முனைவர் **தி. சுப்பிரமணியன்**

தொல்லியல் அலுவலர்

தருமபுரி



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு

2010

நூல் சேர்க்கை
எண். 12163

# அச்சிட்டோர் விவரம்

முதற் பதிப்பு : 2010

வெளியீடு எண் : 217

நூலின் பெயர் : தருமபுரி நடுகல் அகழ்வைப்பகம் (கையேடு)

பதிப்புரிமை : தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

பதிப்பாசிரியர் : முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப.,

ஆசிரியர் : முனைவர் தி. சுப்பிரமணியன்

மொழி : தமிழ்

எழுத்தின் அளவு : 12 pt.

தாள் அளவு : 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ

படிகள் : 500

பக்கங்கள் : 69

விலை : 66.00

அச்சிட்டோர் : இராயப்பேட்டை எழுதுபொருள் (ம) அச்சு (ம)
உபபொருட்கள் தயாரிப்பாளர்கள் தொழிற்
கூட்டுறவு சங்கம் (வ.து)
26, கோயா அருணகிரி தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14

முன் அட்டை: நடுகல், பனிஞ்சரஅள்ளி
கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டு

# பொருளடக்கம்


பதிப்புரை

முன்னுரை

1. தருமபுரி அகழ்வைப்பகத்தின் தோற்றம் ... 1
2. தகடூர் நாடும் வரலாறும் ... 3
3. பழைய கற்காலம் ... 21
4. நடுகற்கள் ... 24
5. சிற்பங்கள் ... 38
6. பிற தொல்பொருட்கள்
    1. பெருவழிக் கற்கள் ... 43
    2. இராவணன் மரச்சிற்பம் ... 46
7. நிகரிலிசோழமண்டலத்திலுள்ள நாடுகள் ... 49

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப.,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ்வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.

# பதிப்புரை

தமிழகத் தொல்லியல் துறை கல்வெட்டுக்களைப் படியெடுத்து அச்சிட்டு வெளியிடுவது, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் அகழாய்வு செய்து வெளியிடுவது, ஓலைச்சுவடிகள், செப்பேடுகள் போன்றவற்றை வாசித்து வெளியிடுவது போன்ற பணிகளுடன் வட்டார அகழ்வைப்பகங்கள் அமைத்து அப்பகுதியின் சிறப்பியல்புகள் பாதுகாத்தல் போன்றவற்றையும் செய்து வருகின்றது. தமிழகத்தில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையான தனித்தன்மைகள் மற்றும் வட்டார வழக்குகள் காணப்படுகின்றன. இவை அப்பகுதியின் இயற்கை அமைப்பை அடிப்படையாகக் கொண்டு உருவானவை. இதைப்போன்று தனித்தன்மையை எடுத்துரைக்கும் வகையில் இத்துறையின் அகழ்வைப்பகங்கள் அமைந்துள்ளன.

அகழ்வைப்பகம் என்பது அவை அமைந்துள்ள அம்மாவட்டத்தின் சிறப்பியல்புகளைக் கூறுவதுடன் அப்பகுதியில் செய்யப்பட்ட அகழாய்வுத் தொல்பொருட்கள் மற்றும் அப்பகுதியில் கிடைக்கும் புதைபொருட்கள் போன்றவற்றைச் சேகரித்து வைக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டவைகளாகும். உதாரணமாக சங்கம் வளர்த்த மதுரையில் அதிகளவில் தமிழி எனப்படும் பிராமிக் கல்வெட்டுகள் கிடைக்கின்ற காரணத்தால் மதுரை திருமலை நாயக்கர் மகாலில் தமிழகத்திலுள்ள தமிழிக் கல்வெட்டுக்கள் அனைத்தையும் தொகுத்து காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அதைப்போன்று தமிழகத்தில் அதிகளவில் நடுகற்கள் கிடைக்கின்ற தகடூர்ப் பகுதியும் தனித்தன்மையை விளக்கும் வகையில் தருமபுரி

அகழ்வைப்பகத்தில் நடுகற்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன. இவை இப்பகுதியின் சமுதாய பழக்கவழக்கங்கள், வழிபாடுகள் போன்றவற்றை மக்களுக்குக் கூறும் வகையில் அமைந்துள்ளன. கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டு வரை கண்டெடுக்கப்பட்ட நடுகற்களில் பல இந்த அகழ்வைப்பகத்தில் இடம்பெற்றுள்ளன. இந்த விவரங்களை அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் இந்த அகழ்வைப்பகக் கையேடு எழுதப்பட்டுள்ளது.

தகடூர் நாட்டில் சங்ககாலம் முதல் விஜயநகர மன்னர்களின் காலம் வரை உள்ள வரலாறு சுருக்கமாகவும், தகடூர் நாட்டில் வாழ்ந்த அதியமான்களின் சிறப்புகள், சமுதாய அமைப்பு, வழிபாடு போன்றவற்றைப் பார்வையாளர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் இக்கையேடு அமைந்துள்ளது.

இந்நூலினை வெளிக்கொணர பகுதி-II திட்டத்தின் கீழ் நிதியுதவி அளித்து சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பகுதிகளில் களஆய்வு செய்தும், அகழாய்வுகளில் ஈடுபட்டும் பல விவரங்களைச் சேகரித்து இந்நூலை எழுதியுள்ள தொல்லியல் அலுவலர் முனைவர் தி. சுப்பிரமணியன் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இந்நூலின் பதிப்புப் பணியினை மேற்கொண்ட இத்துறை அகழாய்வாளர் முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கும், இந்நூலினை நல்ல முறையில் டி.டி.பி செய்து, அட்டைப்படம் வடிவமைத்த திருமதி ச.சரஸ்வதி மற்றும் அச்சுப்பிழை திருத்திய திருமதி கோ. செம்மலர் அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

இந்நூல் இப்பகுதி மக்களுக்கும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

# முன்னுரை

தமிழக வரலாற்றில் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பது போன்று தகடூர் நாடும் தனி நாடாக இருந்தது. இதை சங்க இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் தெளிவாகக் கூறுகின்றன. தகடூர் நாட்டில் முல்லையும், குறிஞ்சியும் அதிகளவில் காணப்படுகின்றன. இதனால் இப்பகுதி மற்ற நாடுகளுடன் இணைய வாய்ப்பின்றி போய்விட்டது. இதனால் தொல்பழங்காலம் தொட்டு கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை இனக்குழு அமைப்பே நிலவியது. மேட்டுநில விவசாயம், கால்நடை வளர்ப்பு இப்பகுதியின் முக்கியத் தொழிலாக இருந்தன. இதனுடைய எச்சங்களும், மிச்சங்களும் இன்று வரை காணமுடிகின்றன.

இனக்குழு மக்களிடையே கால்நடைகளே சொத்தாகக் கருதப்பட்டன. இத்தகைய கால்நடைகளை ஒரு இனக்குழுவிடமிருந்து, மற்றொரு இனக்குழு கவர்ந்து செல்வது அக்கால வழக்காக இருந்தது. அவ்வாறு கவர்ந்து சென்ற கால்நடைகளை வீரம் கொண்ட மறவர்கள் மீட்டு வருவது அவர்கள் சார்ந்த இனக்குழுக்களுக்குப் பெருமையை சேர்ப்பதாக இருந்தது. அப்போது அக்குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட பூசல்களில் வீரமரணம் எய்திய வீரர்களுக்கு நடுகற்கள் எடுக்கப்பட்டன. நடுகற்கள் அந்தந்த இனக்குழுவைச் சார்ந்தவர்களே எடுத்தனர். தகடூர்ப் பகுதியில் இதைப்போன்ற நடுகற்கள் அதிகளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்கள், நடுகற்கள் எடுப்பதைப் பற்றி விரிவாகப் பேசுகின்றன. அவற்றில் தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை போன்றன குறிப்பிடத்தக்கவைகளாகும். இதைக் கல்வெட்டுக்கள் தொறுக்கவருதல், தொறுமீட்டல் என்று குறிப்பிடுகின்றன. இவற்றுடன் புலி குத்தப்பட்டான் நடுக்கல், பன்றி குத்தப்பட்டான் நடுக்கல், போன்ற நடுகற்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. நடுகற்களில் வீரனின் உருவம், மங்கள சின்னங்கள் ஆகியவற்றுடன் வீரன் உயிர் நீத்த விவரம் போன்றன தெளிவாக காணப்படுகின்றன. இதை போன்ற பல நடுகற்கள் தருமபுரி அகழ்வைப்பகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வட்டார அகழ்வைப்பகங்கள் அப்பகுதியின் தனிதன்மையை அல்லது பெருமையை வெளிபடுத்தும் வகையில் அமையவேண்டும் என்றும் இதனால் அப்பகுதியின் பண்பாடு மற்றும் கலாச்சாரம் ஆகியன பார்வையாளர்களுக்கு தெரியவரும் என்றும் இத்துறையின் முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இஆப., அவர்களின் கருத்துப்படி இந்த அகழ்வைப்பகம் ''நடுகல் அகழ்வைப்பகம்'' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த அகழ்வைப்பகத்தில் அதிக அளவில் நடுகற்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. நடுகற்களின் வளர்ச்சி நிலையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு தகுந்தவாறு பல வகையான நடுகற்கள் உள்ளன. இவ்வகழ்வைப்பகக் கையேடு பார்வையாளர்களுக்கு மட்டுமன்றி ஆய்வு மாணவர்களுக்கு உதவியாக இருக்கும்.

தகடூர்ப்பகுதியின் தனித்தன்மையைக் கூறும் வகையில் தொல்பழங்கால மக்களின் கல்லாயுதங்கள் முதல் பெருங்கற்கால ஆயுதங்கள், சிற்பங்கள், கல்வெட்டுக்கள், நவகண்ட சிற்பங்கள், 'சதி' எனப்படும் உடன்கட்டையைக் குறிக்கும் கற்சிற்பங்கள் போன்றவை இவ்வகழ்வைப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவை பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமன்றி இப்பகுதி மக்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நான் இப்பகுதியைச் சார்ந்தவன் என்ற நிலையில் இவ்வகழ்வைப்பகக் கையேட்டினை உருவாக்க ஆக்கமும், ஊக்கமும் தந்த முதன்மைச்செயலாளர் மற்றும் ஆணையர் முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப., அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை பதிப்பிக்க துணைநின்ற அகழாய்வாளர் முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கும் ஏனைய அலுவலக நண்பர்களுக்கும், மேலும் இந்நூலின் அச்சுப்பணியினை மேற்கொண்ட அச்சுப்பிரிவினருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி. சுப்பிரமணியன்**
தொல்லியல் அலுவலர்
தருமபுரி

# தருமபுரி அகழ்வைப்பகத்தின் தோற்றம்

தருமபுரி அகழ்வைப்பகம் தருமபுரியின் மையப் பகுதியிலுள்ள பேருந்து நிலையத்தின் அருகில் அமைந்துள்ளது. இந்த அகழ்வைப்பகம் முதலில் தகடூர் வரலாற்றுப் பேரவையைச் சார்ந்த ஆசிரியர்களின் துணையுடன் அப்போதைய மாவட்ட ஆட்சியராக இருந்த சிவசுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்களின் முயற்சியுடன் உருவாக்கப்பட்டது. தகடூர் பகுதியிலிருந்த சிற்பங்கள், நடுகற்கள் போன்ற தொல்பொருட்கள் இவர்களுடைய முயற்சியால் சேகரிக்கப்பட்டன. கோவை பதிவு அலுவலராக இருந்த முனைவர் இரா. பூங்குன்றன் அவர்களின் அறிவுரையின்படி அகழ்வைப்பகம் அமைக்கப்பட்டது. பின்னர் இவ்வாறு உருவாக்கப்பட்ட அருங்காட்சியகம் தமிழகத் தொல்லியல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த அகழ்வைப்பகத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணியாற்றியுள்ளனர்.

1. முனைவர் சொ. சாந்தலிங்கம்.
2. திரு. ச. கிருஷ்ணமூர்த்தி
3. முனைவர் தி. சுப்பிரமணியன்
4. திரு. பெ. கௌதமபுத்திரன்
5. திரு. மா. கலைவாணன்
6. திரு. ச. பரணன்
7. திரு. இரா. சிவானந்தம்
8. திரு. ச. செல்வராஜ்

தருமபுரி மாவட்ட ஆட்சியரின் உதவியுடன் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டடத்தில் இந்த அருங்காட்சியகம் தொடங்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை அதே கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. தகடூர் பகுதியில் அதிக அளவில் நடுகற்கள் காணப்படுகின்றன. இவை கி.பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து காணப்படுகின்றன. இதனால் இப்பகுதியில் கிடைக்கின்ற நடுகற்களின் தோற்றம், வளர்ச்சி நிலைகளை வெளிப்படுத்தும்

வகையில் இந்த அகழ்வைப்பகம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே இதற்கு "நடுகற்களின் அகழ்வைப்பகம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நடுகற்களில் உள்ள கல்வெட்டுகளில் வட்டெழுத்து மற்றும் தமிழ் எழுத்துக்கள் வெட்டி வைக்கப்பட்டுள்ளன. இவை அக்கால வழக்கத்தில் இருந்த எழுத்துக்களின் அமைப்பு வளர்ச்சி நிலைகளைத் தெரிந்து கொள்ள உதவும் வகையில் அமைந்துள்ளன.

தகடூருக்கு அருகிலுள்ள மோதூர் என்ற இடத்தில் செய்யப்பட்ட அகழாய்வு தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இங்கு புதிய கற்காலம் தொடங்கி வரலாற்றுக்காலம் வரை தொல்பொருட்கள் தொடர்ந்து கிடைத்துள்ளன. இதைப் போன்று தருமபுரி பகுதியில் மயிலாடும்பாறை, குட்டூர், மல்லப்பாடி, அதியமான்கோட்டை, தொகரப்பள்ளி ஆகிய இடங்களிலும் அகழாய்வு செய்யப்பட்டுள்ளன. இந்த அகழாய்வுகளில் கற்காலம் முதல் வரலாற்றுக்காலம் வரையிலான தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. இங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களும் இதன் விபரங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

# தகடூர் நாடும் வரலாறும்

தகடூர் நாடு என்பது தற்போதைய தருமபுரி மற்றும் கிருட்டிணகிரி மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். தகடூர் நாட்டில் மலைகளும், குன்றுகளும் அதிக அளவில் காணப்படுவது போன்று காடுகளும், மேடுபள்ளங்களும் இணைந்த நிலப் பரப்பினைக் கொண்டதாகும். தகடூர் நாடு சாதாரண நிலப்பரப்பும், தக்காண பீடபூமி என்று அழைக்கப்படும் மலைப்பாங்கான நிலப்பரப்பும் இணைந்த நிலவியல் அமைப்பைக் கொண்டுள்ளது.

விஜயநகர மன்னர்களின் காலத்தில் தகடூர் பகுதி "பாரா மகால்" என்றும் "பாலகாட்" என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பாரா என்றால் 12 என்ற எண்ணிக்கை என்றும், 'மகால்' என்றால் கோட்டைகள் என்றும் பொருள் கொண்டு, 12 கோட்டைகளைக் கொண்டது பாராமகால் என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. நிர்வாகத்திற்காகப் பிரிக்கப்பட்டதால் இதில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இப்பகுதி ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டிற்கு வந்த பின்னர் இவை நடைமுறையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தனிநாடு

தகடூர் நாடு கொங்கு நாட்டின் பிரிவா அல்லது தனி நாடா என்பதில் ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. தகடூர் நாடு கொங்கு நாட்டின் ஒரு பிரிவு என்று புலவர் குழந்தை 'கொங்கு நாட்டு வரலாறு' என்ற நூலில் குறிப்பிட்டிருக்கின்றார். இதற்கு கொங்கு மண்டல சதகத்தில் வரும் பாடல் ஒன்றை ஆதாரமாக எடுத்துக் கூறியுள்ளார்.

"வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொறுப்பு வெள்ளிக் குன்று - கிடக்கும்
கழி தண்டலை மேவு காவிரிசூழ் நாட்டுக்
குளித்தண்டலையளவு கொங்கு"

இப்பாடலில் பெரும்பாலை என்பது கொங்கின் வடவெல்லை என்று வருகின்றது. மேலும் பெரும்பாலை தகடூர் நாட்டின் எல்லை

என்பது தெளிவாகின்றது. இதையே கே.வி. சுப்பிரமணிய அய்யர், பெரும்பாலை கொங்கின் வடவெல்லை என்று குறிப்பிடுகின்றார். கொங்கு நாட்டில் வருகின்ற 24 நாடுகளில் ஒரு நாடு 'தட்டை நாடு' என்று வருகின்றது. மேலும் தகடூர் நாட்டில் உள்ள கல்வெட்டுகளில் எதிலும் கொங்கில் தகடூர் என்று வரவில்லை. இதற்கு மாறாக கங்க நாட்டு தகடூர் என்று வருகின்றன. எனவே தகடூர்நாடு என்பது தனி நாடு என்பது தெளிவாகின்றது.

தகடூர்யாத்திரை என்ற சங்ககால நூல் சேரர்களும், அதியர்களும் ஒரு மரபைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் இரண்டு தலைகளையும் ஒரு உடலையும் கொண்ட கண்டபேருண்ட பட்சியைப் போன்றவர்கள் என்றும் கூறுகின்றது. எனவே சங்ககாலத்தில் சேரர் வழிவந்த அதியர்கள் தகடூர் நாட்டை ஆண்டனர் என்று கூறலாம்.

## தகடூர்

தகடூர் என்ற பெயர் அகநானூறு, பதிற்றுப்பத்து போன்ற சங்ககால இலக்கியங்களில் பயின்று வருகின்றது. இதற்குத் தகடை, தகடூர், தகடாபுரி போன்ற வேறு பெயர்களும் காணப்படுகின்றன. தகடை என்பதற்குத் தகடு போன்ற வடிவம் கொண்டது என்று பொருள் கூறப்படுகின்றது. ஆனால் இது ஏற்புடையதாக இல்லை. தகடூர் நாடு மேடுபள்ளங்களும், மலைகளும் சூழ்ந்த பகுதியாகும். தகர மரம் என்ற ஒரு வகை மரம் இப்பகுதியில் நிறைந்திருந்ததால் இந்த மரத்தின் அடிப்படையில் தகடூர் என்ற பெயர் வந்தது என்று மற்றொரு கருத்து உள்ளது. மரம், செடி, கொடி போன்றவற்றின் பெயரில் நாட்டின் பெயர் வருவது இயற்கை.

தகடூர்யாத்திரை என்ற நூல் தாமரைப்பூவின் புறவிதழைப் போன்ற அமைப்புடைய ஊர் என்பதை "தடங்கமலத்தகடை" என்று குறிப்பிடுகின்றது. தகடூர் நான்கு பகுதிகளிலும் மலைகளால் சூழப்பட்டுள்ளது என்றும் இவைகளுக்கு இடைப்பட்ட சமவெளி பகுதியே தகடூர் என்றும் இதற்கு பொருள் கொள்ளலாம். இதற்கு ஆதாரமாக பதிற்றுப்பத்து பாடலில் வரும் "இறும்பின் தகடூர்" என்ற வரியைக் கூறலாம். எனவே தகடூர் என்ற பெயர் இயற்கையாக அமைந்த மலையரணை அடிப்படையாகக் கொண்டு வந்தது என்றும் கூறலாம்.

தகடூர் என்ற பெயர் விஜயநகர மன்னர்களின் காலம் வரை காணப்படுகின்றது. இவர்களுடைய இறுதிக் காலத்தில் தருமபுரி என்ற பெயர் மாற்றம் வந்துள்ளது. ஜெகதேவிராயர் என்பவர் இப்பகுதியைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இவர் ஆந்திர மாநிலத்திலுள்ள தருமபுரி என்ற பகுதியிலிருந்து வந்தவர் என்பதால் இப்பகுதிக்கும் அந்த பெயரையே வைத்தார் என்று கூறப்படுகின்றது. மேலும் இவர் வைணவத்தை வளர்த்தார். இப்பகுதியில் பெரும்பாலான ஊர்களில் பாரத கோயில்களைக் கட்டியுள்ளார்.

அகநானூறு பாடல் ஒன்று தகடூரை 'விரவுமொழித் தகடூர்' என்று கூறுகின்றது. பல மொழிகளைப் பேசுகின்றவர்கள் வாழுகின்ற பகுதி என்று பொருள். தகடூர் நாடு தமிழகத்தின் எல்லையில் அமைந்ததால் பல மொழிகளைப் பேசுகின்ற மக்கள் இருந்தனர் என்பது தெளிவாகின்றது.

## தொல்பழங்காலம்

கிருட்டிணகிரி மாவட்டத்தில் வரட்டணபள்ளி என்ற ஊருக்கு அருகில் கற்கால மக்களின் கல்லாயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன. இங்கு கற்கால மக்கள் பயன்படுத்திய கைக்கோடாரிகள், வட்டக்கருவிகள், சுரண்டிகள் போன்ற கல்லால் செய்யப்பட்ட கருவிகள் கிடைத்துள்ளன. இக்கல்லாயுதங்களைச் சேகரித்து ஆய்வு செய்து இவை செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அத்திரம்பாக்கம் என்ற இடத்தில் கிடைத்துள்ள கல்லாயுதங்களைப் போன்று உள்ளன என்றும், இவை இடைக்காலத்தைச் சார்ந்த மக்களால் உருவாக்கப்பட்டது என்றும் கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது. எனவே இவை சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று கல்லாயுதங்களின் அமைப்பு, வடிவம் ஆகியவற்றைக் கொண்டு காலம் கூறப்பட்டுள்ளது.

புரூஸ்புட் என்ற நிலவியல் ஆய்வாளர் பர்கூர் அருகிலுள்ள கப்பல்வாடி என்ற பகுதியில் சில கல்லாயுதங்களை 1887-ல் கண்டெடுத்தார். இவை கற்கால மக்களின் ஆயுதங்களைப் போன்று இருக்கின்றன. ஆனால் எக்காலத்தைச் சார்ந்தது என்று கூற இயலவில்லை என்று கருத்து தெரிவித்துள்ளார். தற்போது வரட்டணபள்ளியில் கிடைத்த கல்லாயுதங்களும் இத்தகைய

அமைப்பை ஒத்து காணப்படுவதால் இங்கு கிடைத்த கல்லாயுதங்களும் கற்கால மக்களின் கல்லாயுதங்கள் என்பது தெளிவாகின்றது.

## நுண்கற்காலம்

கற்காலத்தின் இறுதிக்காலம் கடைக்கற்காலம் அல்லது நுண்கற்காலம் என்று அழைக்கப்படுகின்றது. சிறிய கல்லாயுதங்களைப் பயன்படுத்தியதால் இக்காலம் நுண்கற்காலம் எனப்பட்டது. நுண்கற்கால கல்லாயுதங்களும் தகடூர் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்கல்லாயுதங்கள் மேற்பரப்பளவிலும், அகழாய்விலும் கிடைத்துள்ளன. கிருட்டிணகிரி மாவட்டத்தில் தொகரப்பள்ளி என்ற ஊருக்கருகில் உள்ள மயிலாடும்பாறை என்ற இடத்தில் செய்யப்பட்ட அகழாய்வில் நுண்கற்கால ஆயுதங்கள் கிடைத்துள்ளன. மயிலாடும்பாறையின் அருகில் உள்ள கூச்சுகுண்டு என்ற இடத்தில் இக்கல்லாயுதங்கள் சுமார் 1 மீட்டர் ஆழத்தில் கிடைத்துள்ளன. இங்கு கிரிஸ்டல், டாலரைட் ஆகிய கற்களால் ஆன கருவிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் தொகரப்பள்ளி, முள்ளிக்காடு, தைலமலை ஆகிய இடங்களிலும் இதைப்போன்ற நுண்கற்காலக் கருவிகள் முதன்முதலில் திருநெல்வேலி பகுதியிலுள்ள மணல் திட்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுடன் அத்திரம்பாக்கம் மற்றும் குடியம் ஆகிய இடங்களில் செய்யப்பட்ட அகழாய்வுகளின் மேல்மட்டத்தில் இக்கால கருவிகள் கிடைத்துள்ளன. இந்த இரண்டு இடங்களிலும் கிடைத்த கல்லாயுதங்களைப் போன்ற ஆயுதங்கள் தருமபுரி பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## புதிய கற்காலம்

நுண்கற்கால மக்களின் வளர்ச்சியடைந்த காலமே புதிய கற்காலம் எனப்பட்டது. இக்காலத்தில் மிருகங்களுடன் மிருகங்களாக வாழ்ந்த நிலையிலிருந்து மாறுபட்டு வாழ்ந்துள்ளனர். கரடு முரடான கல்லாயுதங்களை விடுத்து தங்களுடைய தேவைக்கு ஏற்ப மாற்றி பயன்படுத்தினர். கால்நடைகளை வளர்க்கக் கற்றுக்கொண்டனர். மேட்டுநில விவசாயம் செய்யத் தெரிந்திருந்த காரணத்தாலும், இக்காலம் புதிய கற்காலம் என்று அழைக்கப்படுகின்றது. புதிய கற்கால மக்கள் சுமார் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தனர் என்று காலம் கணக்கிடப்பட்டுள்ளது.

கால்நடைகளை வளர்க்கக் கற்றுக்கொண்ட இவர்கள் நிலையான வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். தேவையான உணவுப்பொருட்களைத் தேடிச்சென்ற நிலையிலிருந்து முன்னேறி தானியங்களை உற்பத்தி செய்யும் நிலைக்கு மாறினர். இக்காலத்தைச் சார்ந்த கற்கருவிகள் பசால்ட், டாலரைட் போன்ற கற்களைக் கொண்டு செய்யப்பட்டுள்ளன. கல்லால் ஆன கோடரி, உளி, கூர்மையான கருவிகள், சுத்தியல், தேய்க்கும் கருவிகள், அரைக்கும் கருவிகள் போன்றவை சேகரிக்கப்பட்டுள்ளன. கப்பல்வாடி, தைலமலை, கொல்லப்பள்ளி, மோதூர், வத்தல்மலை, மயிலாடும்பாறை போன்ற இடங்களில் புதிய கற்கால மக்களின் கல்லாயுதங்கள் கிடைத்துள்ளன. மயிலாடும்பாறை, மோதூர், பையம்பள்ளி ஆகிய இடங்களில் இவர்கள் வாழ்ந்ததற்கான எச்சங்கள் கிடைத்திருக்கின்றன. குழி வீடுகளில் வாழ்ந்தனர் என்பதைப் பையம்பள்ளி அகழாய்வு கூறுகின்றது. மட்கலங்களைச் செய்யும் தொழில்நுட்பத்தின் தொடக்க காலமாக இருந்தது.

## பெருங்கற்காலம்

புதிய கற்காலத்தைத் தொடர்ந்து பெருங்கற்கால மக்கள் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்பது அகழாய்வுகளின் மூலம் தெரியவருகின்றது. பெருங்கற்காலம் நாகரீக வாழ்க்கையின் தொடக்க காலம் என்று கூறலாம். இக்கால மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். நினைவுச் சின்னங்களை அமைக்க பெரிய பெரிய கற்களைப் பயன்படுத்தி யுள்ளனர். இத்தகைய சின்னங்களுக்கு கல்வட்டம், கல்திட்டை, கற்பதுக்கை போன்ற பெயர்கள் உள்ளன. ஈமச்சின்னங்களின் மேல் பெரிய பெரிய கற்களை வைத்து நினைவுச்சின்னம் உருவாக்கியதால் இக்காலம் பெருங்கற்காலம் என்று அழைக்கப்பட்டது. இத்தகைய நினைவுச்சின்னங்களும், ஊர் இருக்கைகளும் தருமபுரி பகுதியில் அதிக அளவில் காணப்படுகின்றன.

மல்லசந்திரம், மகாராஜகடை, கங்கலேரி ஆகிய இடங்களில் கிடைக்கின்ற கல்திட்டை வகையைச் சார்ந்த ஈமச்சின்னங்கள் குறிப்பிடத்தக்கன. 1000-க்கும் மேற்பட்ட கல்வட்ட வகையைச் சார்ந்த ஈமச்சின்னங்கள் செங்குட்டை, பன்னப்பட்டி, பச்சிகானபள்ளி

ஆகிய இடங்களில் உள்ளன. பாலக்கோடு அருகிலுள்ள திருமல்வாடி என்ற இடத்தில் குத்துக்கல் வகையைச் சார்ந்த நினைவுச்சின்னம் ஒன்று உள்ளது.

பெருங்கற்கால மக்கள் இறந்தவர்களை வழிபடுகின்ற வழக்கமும், இனக்குழு அமைப்பு முறையையும் கொண்டிருந்தனர். கால்நடைகளை வளர்க்கவும், விவசாயம் செய்யவும் தெரிந்திருந்தனர். நீர்நிலைகளில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்த தெரிந்திருந்ததால் நீர்நிலைகளின் அருகில் குடியமைப்புகளை உருவாக்கியுள்ளனர். இரும்பின் பயனைக் கற்றுக்கொண்டதுடன் இரும்பால் ஆன ஆயுதங்களையும் செய்யத் தெரிந்திருந்தனர். இரும்பு பயன்பாட்டில் இருந்ததால் இக்காலம் இரும்புக்காலம் என்றும் அழைக்கப்பட்டது.

சக்கரத்தின் உதவியுடன் மட்கலங்களைச் செய்யும் நுட்பமும் கற்றிருந்தனர் கருப்பு-சிவப்பு மட்கலங்கள் எனப்படும் நேர்த்தியான மட்கலங்களைச் செய்யத் தெரிந்திருந்தனர் இவற்றுடன் சிவப்பு மட்கலங்கள், கருப்பு மட்கலங்களையும் பயன்படுத்தி யுள்ளனர்.

## சங்க கால அதியமான்கள்

சங்க காலத்தில் தகடூரைத் தலைநகரமாகக் கொண்டு அதியமான் மரபினர் ஆட்சி செய்தனர். சங்க இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து போன்ற நூல்களில் அதியமான் மரபினர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கிடைத்தற்கரிய நெல்லிக்கனியை கடை ஏழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் ஔவையாருக்குக் கொடுத்தான். தகடூர் யாத்திரை என்னும் நூல் தகடூரைப் பற்றியும், தகடூர் போரைப் பற்றியும் பல செய்திகளைக் கூறுகின்றது.

அதியமான்கள் சேர மரபினர் வழிவந்தவர்கள். பனம்பூ மாலையை அணிந்தவர்கள் சங்க இலக்கியங்கள் இவர்களை அதியன், அதியமான், அதியர்கோமான் போன்று பல பெயர்களில் குறிப்பிடுகின்றன. இப்பெயருடன் அஞ்சி என்ற பெயரை இணைத்து 'நெடுமான் அஞ்சி' என்று வருகின்றது. இதைப் போன்று அதியமான்

என்ற சொல் எல்லா இயற்பெயரின் முன்னரும் வருகின்றது. எனவே இதை சோழர், பாண்டியர், சேரர் போன்று குடிப்பெயராகக் கொள்ளலாம்.

அதியமான் என்ற பெயரின் தோற்றம் பற்றி பல கருத்துகள் ஆய்வாளர்களிடையே நிலவுகின்றன. அதியன் என்பது 'அத்தி' என்ற மரத்தின் பெயரிலிருந்து வந்தது என்றும் பின்னர் மருவி அதியமான் ஆனது என்றும் ஒரு கருத்து உள்ளது. இதற்கு அத்தி மரங்கள் நிறைந்த காடுகளை உடையவர் என்று பொருள் கொள்கின்றனர். அதியன் என்பதற்கு "உயர்ந்தவன், சிறந்தவன், பெருமைக்குரியவன்" என்ற பொருளும் உள்ளது. சேரர், சோழர், பாண்டியர்களைப் போன்று சிறந்தவர்களாக இருந்ததால் இப்பெயர் வந்தது என்று மற்றொரு கருத்து உள்ளது. இதில் உயர்ந்தவன் என்று ஆனபின்னர் இப்பெயர் வந்திருக்க வாய்ப்புகள் இல்லை. ஆனால் இயற்கையாக அமைந்த மரம், செடி போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டு பெயர் வந்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

அதியமான் என்பது சேரமான், மலையமான் போன்று வந்தது என்றும் இவர்கள் சேரர் வழி வந்தவர்கள் என்றும் கருதப்படுகின்றது. இதை சேரர் + மகன் = சேரமான், மலையன் + மகன் = மலையமான் என்பது போல், அதியர் + மகன் = அதியமான் என்று கொள்ள வாய்ப்புகள் உள்ளன. நற்றிணையில் அதியமானைக் குறிப்பிடும்போது 'நெடுமான் அஞ்சி' என்று வருகின்றது. அதியமான் நெடுமான் அஞ்சி என்று இலக்கியங்களில் வரவில்லை. இந்த தொடர் தென்னார்க்காடு மாவட்டம் ஜம்பையில் உள்ள தமிழி கல்வெட்டில் "அதியமாந் நெடுமான் அஞ்சி" என்று வருகின்றது. அதன் வாசகம் வருமாறு

"சதியபுதோ அதியந் நெடுமான் அஞ்சி ஈத்த பாளி"

மாமன்னன் அசோகனின் கல்வெட்டில் சோழர், பாண்டியர், கேரள புத்திரர், சத்திய புத்திரர் போன்ற அரச மரபினர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அசோகனின் கல்வெட்டில் வருகின்ற அரச மரபினர்களின் பெயர்கள் எல்லாம் தெரிந்திருந்த போதும் சத்திய புத்திரர் என்பவர்கள் யார் என்பது தெரியவில்லை. இதைப் பற்றி பல ஆய்வாளர்கள் பல கருத்துகளைத் தெரிவித்திருந்தனர்.

இதைத் தெளிவுபடுத்தும் வகையில் ஜம்பை கல்வெட்டு அமைந்துள்ளது. 'சதியபுத' என்று அசோகனின் கல்வெட்டில் வரும் சொல் பிராகிருத சொல். இச்சொல்லின் சமஸ்கிருத வடிவமே 'சத்தியபுத்திர' என்பது தெரியவருகின்றது. எனவே அசோகன் கல்வெட்டில் வரும் சதியபுத என்பது அதியமான்களைக் குறிப்பிடும் சொல் என்று தெளிவாகின்றது. முடியுடைய மன்னர்களுக்கு இணையாக அதியமான்கள் அக்காலத்தில் இருந்தனர் என்பது புலப்படுகின்றது.

ஜம்பையில் கிடைத்துள்ள தமிழி அல்லது பிராமி கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இதன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு எனக் கூறப்பட்டுள்ளது.

## நாமக்கல்

சங்க காலத்திற்குப் பின்னர் அதியமான்கள் எங்கு இருந்தனர் என்பது பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை. ஆனால் நாமக்கல் பகுதியில் அதியன் என்ற மன்னன் இருந்தான் என்று இங்குள்ள கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இங்குள்ள குடைவரை கோயிலுக்கு 'அதியநாத விஷ்ணு கிரகம்' என்றும் 'அதியேந்திர விஷ்ணுக்கிரகம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதை அதியர் மரபில் வந்த மன்னன் எடுத்துள்ளான் என்பது தெரிகின்றது. இங்கு அரங்கநாத பெருமாள் கோயில், இலக்குமி நரசிம்மப் பெருமாள் கோயில் ஆகிய இரண்டு குடைவரைக் கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன.

நாமக்கல்லில் உள்ள குடைவரைக் கோயிலில் அதியனுக்குரிய 12 பட்டப் பெயர்கள் கல்வெட்டாக வெட்டி வைக்கப்பட்டுள்ளன. இதில் இக்காலம் பற்றிய குறிப்புகள் எதுவுமில்லை. எனவே எழுத்தின் வடிவத்தையும், அமைப்பையும் கொண்டு இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று காலம் கூறப்பட்டுள்ளது. எனவே அதியமான்கள் இப்பகுதியில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இருந்தனர் என்பது தெளிவு.

## பல்லவர்கள்

தகடூர் பகுதியில் பல்லவ மன்னர்களின் கல்வெட்டுக்கள் நடுகல் கல்வெட்டுக்களாகவே கிடைக்கின்றன. காலத்தால் முற்பட்ட நடுகல்லில் வரும் 'விண்ணபருமன்' 'கோவிசைய' போன்ற சொற்களின் அடிப்படையில் இக்கல்வெட்டுக்கள் பல்லவ

மன்னர்களின் கல்வெட்டுக்களாக இருக்கலாம் என்ற கருத்து காணப்படுகின்றது. பல்லவ மன்னர்களான சிம்ம விஷ்ணு, முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், ஈசுவரவர்மன் ஆகியோரின் கல்வெட்டுக்கள் தகடூர் பகுதியில் கிடைக்கின்றன. தருமபுரி மாவட்டத்தில் கிடைத்த ராயக்கோட்டை செப்பேடு கந்தசிஸ்ய விக்கிரமவர்மன் என்ற பல்லவ மன்னனால் வழங்கப்பட்டது. இந்த பல்லவ மன்னன் யார் என்பது தெரியவில்லை. ஆனால் இதன் காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுகின்றது.

பல்லவ மன்னர்கள் தொண்டை நாட்டில் சிறப்புற்ற அரச மரபினர்களாக இருந்தனர். இவர்கள் தொண்டை நாட்டில் கட்டட கலைக்கும், சிற்பக் கலைக்கும் ஆற்றிய பணிகளுக்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. மகாபலிபுரத்திலும் காஞ்சியிலும் இவர்கள் எடுத்துள்ள கோயில்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. அங்கு பல கல்வெட்டுக்களும் வெட்டி வைத்துள்ளனர். ஆனால் தகடூர் பகுதியில் கிடைக்கின்ற கல்வெட்டுக்கள் நடுகல் கல்வெட்டுக்களே. எனவே பல்லவ மன்னர்கள் தகடூர் பகுதியைத் தங்களுடைய நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவரவில்லை. பல்லவர்களின் மேற்பார்வையிலும், அவர்களுடைய நாட்டின் எல்லையாகவும் தகடூர் பகுதியை வைத்திருந்ததால் கட்டடக்கலை, சிற்பக்கலை மற்றும் கல்வெட்டு ஆகியவற்றில் நாட்டம் காட்டவில்லை. இதனால் பல்லவர் காலத்தில் தகடூர் பகுதியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படவில்லை என்று கூறலாம்.

## கங்கர்கள்

கர்நாடகப் பகுதியில் ஆட்சி செய்தவர்கள் கங்கர்கள். இவர்களுடைய கல்வெட்டுக்கள் பல தகடூர் நாட்டிலும் கிடைக்கின்றன. இவர்களுடைய கல்வெட்டுக்கள் அனைத்தும் நடுகல் கல்வெட்டுக்களே. கர்நாடகப் பகுதியில் இருந்த கங்கர்கள் தகடூரை அவர்களுடைய மேற்பார்வையில் வைத்துக்கொண்டனர். இதனால் இப்பகுதியும் கங்கநாடு என்று பெயரிடப்பட்டுள்ளது. கங்க மன்னர்களான முதலாம் சிவமாரன், ஸ்ரீபுருசன், கட்டாணைபருமர், இரண்டாம் சிவமாறன் போன்றவர்களின் நடுகல்

கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கங்க மன்னர்கள் தகடூர் பகுதியை தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும் இது அவர்களுடைய எல்லைப் பகுதியாக இருந்ததால் இந்நாட்டின்மேல் அதிக கவனம் செலுத்தவில்லை. இதனால் கங்க மன்னர்கள் இதன் வளர்ச்சிக்கு எப்பணியும் செய்யவில்லை என்பது தெரிகின்றது.

## நுளம்பர்கள்

கர்நாடகம் ஆந்திரம் ஆகிய பகுதிகளில் இருந்தவர்கள் நுளம்பர்கள். பல்லவ மன்னர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக நுளம்பர்கள் இருந்தனர். தகடூர் பகுதியில் இவர்களுடைய ஆட்சி கி.பி. 850-ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்பட்டது. இப்பகுதியில் இருந்த பாணர்களை நுளம்ப மகேந்திரன் என்ற நுளம்ப மன்னன் வென்று, தகடூர் நாட்டை தன் நாட்டுடன் இணைத்துக்கொண்டு தகடூருக்கும் நுளம்பபாடி என்று பெயர் மாற்றம் செய்தான். நுளம்பர்களின் ஆட்சி இப்பகுதியில் சுமார் 100 ஆண்டுகள் இருந்தது. தருமபுரி மாரியம்மன் கோயிலில் உள்ள நுளம்ப மன்னன் மகேந்திரனின் கி.பி. 878-ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கன்னட கல்வெட்டில் மருதேரி என்ற ஏரி ஒன்றைக் கட்டி அதைப் பென்னேர குரவர் என்ற சைவ ஆச்சாரியாருக்குக் கொடுத்தார் என்றும், அவர் அதை தகடூர் நகர வணிகர்களிடம் ஒப்படைத்தார் என்றும் இக்கல்வெட்டு கூறுகின்றது.

தருமபுரி கோட்டை கோயிலில் இவருடைய மற்றொரு கன்னடக் கல்வெட்டு உள்ளது. கி.பி. 893-ஆம் ஆண்டைச் சார்ந்த இக்கல்வெட்டில் தகடூரில் இருந்த நீதியண்ணன், சண்டியண்ணன் ஆகிய இரண்டு மங்களபுரத்து வியாபாரிகள் சமணக்கோயில் ஒன்றைக் கட்டினர் என்றும், இக்கோயிலுக்கு மகேந்திரபள்ளி என்ற ஊரைத் தானமாகக் கொடுத்த செய்தியும் குறிப்பிடப் பட்டுள்ளது. இது சமணக்கோயிலில் இருந்த வினயசேனன் என்பவரின் மாணாக்கன் கனகசேனன் என்ற துறவிக்கு வழங்கப்பட்டது என்றும் கூறுகின்றது.

இவரை அடுத்து ஆட்சி செய்த அய்யப்ப தேவன் என்ற நுளம்ப மன்னன் மகேந்திரனின் மகன். இவர் புதுக்கூரு என்ற ஊரை நீதியண்ணன் மற்றும் சண்டியண்ணன் கட்டிய சமணக் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்த செய்தியை மற்றொரு கல்வெட்டு கூறுகின்றது. இவரை அடுத்து அன்னிகன் என்ற அண்ணயன் வீர நுளம்பன் என்ற மன்னன் ஆட்சி செய்தான் என்ற செய்தி இவனுடைய நடுகல் கல்வெட்டிலிருந்து கிடைக்கின்றது.

## வாணர்கள்

பல்லவர், கங்கர் போன்று வாண அரச மரபினர்களின் கல்வெட்டுக்களும் தகடூர் பகுதியில் கிடைக்கின்றன. இவர்கள் தங்களை மகாபலிச் சக்கரவர்த்தியின் வழி வந்தவர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். இவர்களுடைய கல்வெட்டுக்களும் நடுகல் கல்வெட்டுக்களாகவே கிடைக்கின்றன. மாவலிவாணராயர், கந்தவாணதியரையர், அரிமிறை பருமர் போன்ற மன்னர்களின் பெயர்கள் கல்வெட்டில் வருகின்றன. கர்நாடகம், ஆந்திரம், தமிழ்நாடு ஆகியவற்றின் எல்லையில் தகடூர் நாடு அமைந்ததாலும் இப்பகுதியில் காடுகளும், மலைகளும் உள்ளதாலும் இங்கு தனியாக ஒரு அரச மரபு உருவாக வாய்ப்பின்றி போய்விட்டது. இதனால் மற்ற பகுதியில் இருந்த சிற்றரசர்கள் அடிக்கடி இப்பகுதியின் மேல் படை எடுத்து வந்துள்ளனர். இதனால் இப்பகுதியில் ஆட்சியைக் கைப்பற்றுவதில் குழப்பங்களே அதிகம் உள்ளன.

## சோழர்கள்

இத்தகைய குழப்பமான சூழ்நிலையில் சோழர்கள் தகடூரை வென்று தங்களுடைய நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்ட பிற்கால சோழர்களின் ஆட்சி எட்டாம் நூற்றாண்டில் தொடங்கியது. இதை உருவாக்கிய விஜயாலயன் வழிவந்த சோழ மன்னர்கள் ஒரு வலுவான ஆட்சியை அமைக்க வித்திட்டனர். இதன் விளைவாக சோழர் ஆட்சி மற்ற பகுதிகளிலும் பரவியது. சோழர்கள் பாண்டிய நாடு, தொண்டை நாடு மற்றும் கொங்கு நாடு போன்ற நாடுகளைக் கைப்பற்றினர்.

## முதலாம் இராசராசன்

சோழ மன்னர்களில் தலைசிறந்தவனான முதலாம் இராசராசன் காலத்தில் சோழநாடு விரிவுபடுத்தப்பட்டது. அவனுடைய கல்வெட்டில் வரும் மெய்க்கீர்த்தியில் வென்ற நாடுகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இராசராசன் மற்ற நாடுகளுடன் கங்கபாடியையும், நுளம்பபாடியையும் வெற்றி கொண்டான். ஆனால் தகடூர் பகுதியில் இவனுடைய கல்வெட்டுக்கள் இரண்டு மட்டும் காணப்படுகின்றன. ஒன்று அமானிமல்லாபுரம் என்ற ஊரிலுள்ள கலிங்கு கல்வெட்டாகும். இதில் நிகரிலி சோழ மண்டலத்து கங்கநாட்டுத் தகடூர் நாடு என்ற செய்தியை மட்டும் காணமுடிகின்றது. மற்றவை முற்றிலும் சிதைந்துள்ளன. எனவே இதிலிருந்து தகடூர் நாட்டை வென்று இதற்கு 'நிகரிலி சோழமண்டலம்' என்று பெயரிட்டதுடன் இதை மண்டலமாகவும் மாற்றியுள்ளான் என்பது தெரிகின்றது.

இரண்டாவது கல்வெட்டு அரூர் வட்டத்தில் உள்ளது. அரூர்வீரசோழ காமுண்டன் மகன் நன்னிகாமுண்டன் என்பவன் 'நெல்வாய்' என்னும் ஊரிலுள்ள மகாதேவர் கோயிலுக்கு திருச்சென்னடைக்குத் தானமாக விட்ட நிலம் பற்றிய செய்தியைத் தருகின்றது.

## முதலாம் இராசேந்திரன்

முதலாம் இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரன். இவர் சோழமண்டலத்தை விரிவுபடுத்த கடல்கடந்து சென்று பல நாடுகளை வென்றதுடன் உள்நாட்டின் பல பகுதிகளையும் தன்னுடைய ஆட்சியின் கீழ் கொண்டுவந்தான். இம்மன்னனின் நான்காம் ஆட்சியாண்டு முதல் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டு வரையில் உள்ள கல்வெட்டுக்கள் தகடூர் பகுதியில் கிடைக்கின்றன. தீர்த்தமலையில் உள்ள கல்வெட்டு ஒன்று தீர்த்தமலை கோயிலில் சேத்திரபாலருக்கும், சண்டேஸ்வரருக்கும் கோயில் கட்டியதைப் பற்றி கூறுகின்றது. மற்றொரு கல்வெட்டு இதே கோயிலில் முகமண்டபத்தைப் புதுப்பித்துக் கட்டியதையும், இக்கோயிலில் நுந்தா விளக்கு எரிக்க தானம் வழங்கியதைப் பற்றியும் குறிப்பிடுகின்றது.

கெரஹோடஅள்ளியில் உள்ள இவருடைய கல்வெட்டு நடுகல் கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் "நுளம்பபாடியான நிகரிலி சோழமண்டலம்" என்று வருகின்றது. எனவே தகடூர் பகுதிக்கு முதலில் நுளம்பபாடி என்ற பெயர் இருந்தது என்பதும் இது சோழர்களின் காலத்தில் நிகரிலி சோழமண்டலமாக மாற்றப்பட்டது என்பதும் தெரியவருகின்றது. எனவே தகடூர் நாடு சோழர் காலத்தில் அவர்களுடைய நேரடி கட்டுப்பாட்டில் இருந்தது என்று கூறலாம்.

இவரைத் தொடர்ந்து வீரராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன். மூன்றாம் இராசராசன் ஆகியோரின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

## மூன்றாம் குலோத்துங்கன்

அரூர் வட்டத்தில் சிந்தல்பாடி என்ற ஊரிலுள்ள ஈசுவரன் கோயிலில் மூன்றாம் குலோத்துங்கனின் ஏழு கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கோயிலுக்கு காரிமங்கலத்தைச் சார்ந்த கெண்டையன் மலையன் என்பவன் சந்தி விளக்கு எரிக்க ஒரு பொன்னும் கானுழாந் உடையான் என்பவன் ஒரு விளக்கெரிக்க ஒரு பொன்னும். யாசக வேளான் மூன்று சந்தி விளக்கெரிக்க ஆறு பசுவும். பிடவாரியர் இரண்டு சந்தி விளக்கெரிக்க ஆறு பசுவும் கொடுத்துள்ளனர். மொத்தமாக ஏழு சந்தி விளக்கெரிக்க இரண்டு பொன்னும், 12 பசுக்களையும் இக்கோயில் காணியுடைய சிவபிராமணன் தில்லை நாயகப் பட்டன் மூவாயிரத்தொறுவன் ஏற்றுக்கொண்டு சந்திர சூரியர் உள்ள வரை விளக்கு எரிக்க ஒப்புக்கொண்டதைக் கூறுகின்றது.

மற்றொரு கல்வெட்டில் ஆலாலசுந்தரம் என்பவன் 63 பசுக்களை தானமாக விட்டதையும் திருமடைவளாகத்தில் தேவரடியாள் ஒருவர் இரண்டு நுந்தா விளக்கெரிக்க நிலம் தானமாகக் கொடுத்ததையும் கூறுகின்றது.

மூன்றாம் இராசராசனின் சிந்தல்பாடி கல்வெட்டு ஒன்று இங்குள்ள சிவனீஸ்வரமுடையார் கோயிலுக்கு திருவிளக்கு எரிக்க நிலதானம் கொடுத்த செய்தியைத் தருகின்றது.

தகடூர் பகுதியில் சோழர்களின் ஆட்சி வரையில் நடுகல் கல்வெட்டுக்களே அதிகம் காணப்படுகின்றது. சோழர்களின் ஆட்சி வந்தவுடன் கோயில் கல்வெட்டுக்கள் அதிகரித்துள்ளன என்பது தெளிவாகின்றது. மேலும் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் அதிகம் இருந்தன. இவை தமிழ் எழுத்துக்களாக மாற்றப்பட்டுள்ளன. பல கோயில்களும், மண்டபங்களும் கட்டப்பட்டுள்ளன. சோழ நாட்டைப் போன்று நாட்டுப் பிரிவுகள் மாற்றப்பட்டுள்ளன. சோழர்களின் காலத்தில் தகடூர் நாடு பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்று கூறினால் அது மிகை ஆகாது.

## பிற்கால அதியமான்கள்

நாமக்கல் குடைவரைக் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களுக்குப் பின்னர் அதியமான்களின் கல்வெட்டுக்கள் சோழர் காலத்தில் கிடைக்கின்றன. இதுவரை அவர்களுடைய நிலையைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை சோழர் காலத்தில் சோழர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக தகடூர்ப் பகுதியில் இருந்துள்ளனர். இவர்களில் இராசராச அதியன் மற்றும் விடுகாதழகிய பெருமாள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## இராசராச அதியமான்

மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தில் இராசராச அதியமான் என்பவர் சோழர்களின் கட்டுப்பாட்டில் இருந்த சிற்றரசர் ஆவார். இவர் திருவண்ணாமலை கோயிலுக்குத் தகடூர்நாட்டில் பெண்ணையின் வடகரையிலுள்ள ஆனந்தூர் கீழ்ப்பிடாகையில் உள்ள மலையனூர் என்ற ஊரைத் தானமாகக் கொடுத்த செய்தி காணப்படுகின்றது. தகடூரிலுள்ள மல்லிகார்ச்சுனர் கோயிலில் பூசை இன்றி இருப்பதால் சிவபிராமணர்களை நியமித்து பூசை செய்ய ஏற்பாடு செய்ததை ஒரு கல்வெட்டு கூறுகின்றது. அதியமான் கோட்டை என்ற ஊரில் சங்க காலம் முதல் அதியர்கள் கோட்டையை அமைத்து ஆட்சி செய்தனர் என்ற கருத்து அதியமான் கோட்டை என்பதால் அறியமுடிகின்றது. இங்கு சென்னை பல்கலைக்கழகத்தைச் சார்ந்த தொல்லியல் துறையினர் இதன் வரலாற்றுப் பின்னணியை ஆய்வு செய்ய இப்பகுதியில் அகழாய்வு செய்தனர். இந்த அகழாய்வில் இடைக்காலத்தைச் சார்ந்த மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர் என்ற விபரம்

கிடைத்துள்ளது. செங்கல் கட்டடம் ஒன்று இருப்பதும் தெரியவந்துள்ளது. இதன் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு என்று குறிப்பிட்டுள்ளனர். எனவே பிற்கால அதியமான்கள் இப்பகுதியில் கோட்டையைக் கட்டியுள்ளனர் என்றும் சங்க கால அதியமான்கள் இப்பகுதியில் இல்லை என்பதும் தெரியவருகின்றது.

இங்கு இரண்டு பெருவழிக்கற்கள் கிடைத்துள்ளன. இவை குறிக்கும் பெருவழிக்கு 'அதியமான் பெருவழி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டின் காலமும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டாகும். இக்கல்வெட்டுக்கள் இதை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

## விடுகாதழகிய பெருமாள்

இவர் இராசராச அதியமானின் மகன். அரூர் வட்டத்தில் தென்பெண்ணை ஆற்றின் வடகரையிலுள்ள சிறுகோட்டை என்ற இடத்தில் விலங்காமொழி விடகாதழகிய பெருமாள் என்று அவருடைய பெயரால் கற்றளி ஒன்றை எடுத்துள்ளார். அவருடைய நாட்டின் எல்லையைக் குறிப்பிடும் கல்வெட்டு ஒன்று இங்கு உள்ளது. அதில் பாலாறு, பொன்னியாறு, தென்பெண்ணை ஆகிய மூன்று ஆறும் தன்னுடைய நாட்டில் ஓடுகின்றன என்பதை எண்சீர்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் பாடலாக வடித்துள்ளான். இக்கல்வெட்டு இக்கோயில் கருவறையின் தென்புறம் உள்ள அதிட்டானத்தில் வெட்டப்பட்டுள்ளது.

"திரைமருவுந் தடங்கமலத் தகடை மன்னன்
செழும்பாவி பெண்ணை பொன்னித் திரநதி மூன்றுடைய
வரைமருவுந் தார்மார்பன் ராஜராஜ வதிகன்
விலங்காமொழி விடுகாதழகிய பெருமாளேய்"

கோட்டைக் கோயில் என்று அழைக்கப்படும் இக்கோயிலின் தென்புறம் 'நமசிவாய' என்பதையும் "விலங்காமொழி" என்ற பெயரையும் எழுத்துக்களை மாறி மாறி எழுதப்பட்டுள்ளன. இவை ஐந்து எழுத்துக்களும் தனித்தனியாக கல்வெட்டில் ஒன்றையடுத்து ஒன்று உள்ளன. இந்த ஊரின் பழைய பெயர் நாகையன் பள்ளி என்று கல்வெட்டு கூறுகின்றது. இதனால் இக்கோயில் நாகை நாயனார் என்று குறிக்கின்றது. இப்பெயர் பிற்காலத்தில் கம்பை நல்லூர் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.

வடஆர்க்காடு மாவட்டத்தில் திருமலையில் உள்ள சமண குடவரைக் கோயில் சீர்கெட்டு இருந்ததை புதுப்பித்ததுடன் இங்கிருந்த இயக்கன், இயக்கி உருவங்களையும் சீர் செய்ததை அங்குள்ள கல்வெட்டு கூறுகின்றது. ஆந்திர மாநிலத்தில் சித்தூர் மாவட்டத்தில் லட்டிகம் என்ற ஊரில் உள்ள நீலகண்டேசுவரர் கோயிலில் சில கல்வெட்டுக்களை வெட்டி வைத்துள்ளனர். இங்குள்ள கல்வெட்டு ஒன்றில் "அதிகேந்திர வியமுக்த ஸ்ரவனோஜ்வலா" என்று தன்னுடைய பெயரைக் குறிப்பிட்டு இருக்கின்றார். இந்த வடமொழிச் சொல்லின் பொருள் 'விடகாதழகிய பெருமாள்' என்பதாகும். இவற்றுடன் வில், குடை, இரண்டு சாமரங்கள் ஆகியனவும் இங்கு வெட்டி வைக்கப்பட்டுள்ளன. இவை அதியமான்களின் சின்னங்களாகும்.

விடுகாதழகிய பெருமாளின் பெயரால் "விடுகாதழகிய பெரும்பள்ளி" என்ற சமணப் பள்ளி ஒன்றை ஊத்தங்கரை வட்டத்தில் உருவாக்கினார் என்பதை ஆம்பள்ளி கல்வெட்டு கூறுகின்றது.

## போசளர்கள்

சோழப் பேரரசு முதலாம் இராசராசனுக்குப் பின்னர் மிகப்பெரிய நாடாக விரிவாக்கப்பட்டது. முதலாம் குலோத்துங்கனின் காலத்திற்குப் பின்னர் வந்த அரசர்களால் இப்பேரரசைக் கட்டிக் காக்க இயலவில்லை. இதனால் பாண்டியர்கள் சோழ நாட்டின் மேல் படையெடுத்து வெற்றி கொண்டனர். சேந்த மங்கலத்தில் இருந்த காடவ மன்னன் கோப்பெருசிங்கன் என்பவன் மூன்றாம் இராசராசனை வென்று சேந்தமங்கலத்தில் சிறை வைத்தான். அப்பொழுது போசளர்கள் சோழர்களுக்கு உதவினர். இரண்டாம் நரசிம்மன் என்ற போசள மன்னன் படை எடுத்து வந்து சோழ மன்னனை மீட்டான். இதனால் போசளர்களின் ஆட்சி தமிழகத்தில் பரவத் தொடங்கியது. போசள மன்னர்களான இரண்டாம் நரசிம்மன், சோமேஸ்வரன், வீரராமநாதன், வீரவிசுவநாதன், மூன்றாம் வல்லாளன் ஆகியோரின் கல்வெட்டுக்கள் தகடூர்ப் பகுதியில் காணப்படுகின்றன.

## வீர நரசிம்மன்

இவருடைய கல்வெட்டுக்கள் அதியமான் கோட்டை, பெண்ணேஸ்வர மடம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. அதியமான் கோட்டை கல்வெட்டு வீரநரசிம்மனின் தானைத் தலைவன் மாதவ தண்டநாயகனின் மந்திரியான பரமேஸ்சுரகணி என்பவன் மகேந்திரமங்கலம் என்ற ஊரில் பரமேஸ்வரமுடையார் என்ற கோயிலைக் கட்டி, பிரதிஸ்டை செய்ததையும் இக்கோயிலுக்குத் திருநாமத்துக் காணியாக நிலம் நீர் வார்த்துக் கொடுத்ததையும் கூறுகின்றது. எனவே அதியமான் கோட்டைக்கு மகேந்திரமங்கலம் என்று மற்றொரு பெயரும் இருந்தது என்பது தெரியவருகின்றது. பரமேஸ்வரமுடையார் கோயில் என்பது தற்போதைய பைரவர் கோயிலாக இருக்க வாய்ப்புகள் உள்ளன.

போசள மன்னர்களின் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் கோயில் கல்வெட்டுக்களாகவே காணப்படுகின்றன. நடுகல் கல்வெட்டுக்கள் குறைந்த அளவில் உள்ளன. கிருட்டினகிரிக்கு அருகிலுள்ள குந்தாணி இவர்களுடைய தலைமை இடமாகத் திகழ்ந்துள்ளது.

## விஜயநகர்

போசள மன்னர்களுக்கு பின்னர் விஜயநகர மன்னர்கள் தகடூர் பகுதியை ஆட்சி செய்துள்ளனர். தகடூர் பகுதியில் ஹரிஹரன், தேவராயன், மல்லிகார்சுனன், விருபாக்ஷர், கம்பண்ணன், புக்கண்ண உடையார் போன்றவர்களின் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. இவர்களுடைய கல்வெட்டுக்கள் தனிக் கல்வெட்டாகவும், கோயில் கல்வெட்டுக்களாகவும் உள்ளன. விஜயநகர மன்னர்களின் காலத்தில் வைணவக் கோயில்கள் அதிக அளவில் கட்டப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக மல்லபாடி, அதியமான் கோட்டை, தென்கரை கோட்டை, ஆளகரை போன்ற ஊர்களில் உள்ள கோயில்களைக் கூறலாம். பல கோயில்களில் மண்டபங்களையும் கோபுரங்களையும் புதிதாகக் கட்டியுள்ளனர்.

அரூர் வட்டத்திலுள்ள தென்கரைக் கோட்டை கல்லியாண ராமர் கோயில் விஜயநகர மன்னர்களின் சிற்பக்கலைக்குக் குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டாகும். அதியமான் கோட்டையிலுள்ள

சென்றாய சாமி கோயிலின் விதானத்திலுள்ள ஓவியங்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. இங்கு விஷ்ணுவின் அவதாரம், இராமாயணக் கதைகள் போன்றவை தீட்டப்பட்டுள்ளன. திருமாலின் விஸ்வரூப ஓவியம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மகாபாரதம், பாகவத கதைகளும் சில இடங்களில் இடம்பெற்றுள்ளன. ஓவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தெலுங்கில் விளக்கக் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன.

பெண்ணேஸ்வர மடம் என்ற ஊரிலுள்ள கம்பண்ணன் கல்வெட்டு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. கி.பி. 1369-ஆம் ஆண்டைச் சார்ந்த கம்பண்ணனுடைய மகாபிரதானியான சோமப்ப தண்ட நாயக்கர் மகனும் கம்பண்ணனுடைய தளபதியுமான கண்டரகூளிமாராய நாயக்கன் என்பவர் பெண்ணை ஆற்றில் "கண்டர் கண்டர் வெளிப் பெருவாய்க்கால்" என்னும் வாய்க்காலை வெட்டுவித்தான் என்று கல்வெட்டு கூறுகின்றது. தகடூர் பகுதியில் தென்பெண்ணை ஆற்றில் பெரிய வாய்க்காலை முதன்முதலில் இவருடைய காலத்தில்தான் வெட்டப்பட்டுள்ளது. கம்பை நல்லூர் என்ற ஊரின் பழைய பெயர் நாகையன்பள்ளி என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இப்பெயர் கம்பண்ணனின் பெயரில் கம்பை நல்லூர் என்று பெயர் மாற்றம் பெற்றிருக்கலாம்.

❀❀❀

நூல் சேர்க்கை
எண் [illegible]

# பழைய கற்காலம்

மனித இனத்தின் தொடக்க காலத்தில் மக்கள் மிருகங்களுடன் மிருகங்களாக காடுகளில் வாழ்ந்தனர். இவர்களுடைய தற்காப்பிற்காகவும், தேவைக்காகவும் கல்லாயுதங்களைப் பயன்படுத்தி உள்ளனர். கல்லால் ஆன ஆயுதங்களைப் பயன்படுத்திய காரணத்தால் இக்காலம் கற்காலம் என்று அழைக்கப்படுகின்றது.

1863-இல் நிலவியல் ஆய்வாளர் புரூஸ் பூட் என்பவர் இன்றைய காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்லாவரம் என்ற இடத்தில் சில கல்லாயுதங்களைக் கண்டெடுத்தார். இங்கு ஓடுகின்ற கோர்தலை ஆற்றின் படுகையில் கிடைத்த கல்லாயுதங்களை ஆய்வு செய்து இங்கு பழைய கற்கால மக்கள் இருந்தனர் என்றும் இப்பகுதியில் கல்லாயுதங்களை செய்யும் தொழிற் பட்டறைகள் இருந்தன என்றும் கண்டுபிடிக்கப்பட்டன.

கிருட்டிணகிரி மாவட்டத்தில் வரட்டணபள்ளி என்ற கிராமத்தின் அருகிலுள்ள மலை அடிவாரத்தில் பழைய கற்கால கல்லாயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு கண்டெடுக்கப் பட்ட கல்லாயுதங்கள் அத்திரம்பாக்கம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கல்லாயுதங்களைப் போன்று காணப்படுகின்றன. இவை இடைக்காலத்தைச் சார்ந்த கல்லாயுதங்கள் என்பது தெரிய வந்துள்ளன. கைக்கோடாரிகள், வட்டக் கருவிகள், சுரண்டிகள் போன்ற கல்லாயுதங்கள் இங்கு சேகரிக்கப்பட்டுள்ளன. எனவே தருமபுரி பகுதியில் இடைக் கற்காலத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. இதன் காலம் சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

## நுண்கற்காலம் (Microlithic Age)

நுண்கற்காலம் என்பது கடைக்கற்காலம் (Late Stone Age) என்றும் அழைக்கப்படுகின்றது. இக்காலத்தில் சிறிய (நுணுக்கமான) கல்லாயுதங்களைப் பயன்படுத்தியதால் நுண்கற்காலம் என்று பெயரிடப்பட்டுள்ளது. கல்லாயுதங்களைச் செய்யும் தொழில்

நுட்பத்தில் வளர்ச்சியடைந்ததால் இத்தகைய கல்லாயுதங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

தருமபுரி பகுதியில் நுண்கற்கால கல்லாயுதங்கள் மேற்பரப்பாய்விலும், அகழாய்விலும் சேகரிக்கப்பட்டுள்ளன. கிருட்டிணகிரி மாவட்டத்தில் உள்ள மயிலாடும்பாறை என்ற இடத்தில் செய்யப்பட்ட அகழாய்வில் நுண்கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. சுரண்டிகள், துளையிடும் கருவிகள், சீவிகள் போன்ற ஆயுதங்கள் குறிப்பிடத்தக்கன. தையல் மலை, முள்ளிக்காடு, தொகரப்பள்ளி, கப்பல்வாடி ஆகிய இடங்களிலும் நுண்கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கோர்தலை ஆற்றுப் பள்ளத்தாக்கில் உள்ள குடியம் மற்றும் அத்திரம்பாக்கம் ஆகிய அகழாய்வுகளில் கிடைத்த நுண்கற்காலக் கருவிகளைப் போன்ற கருவிகளும் கப்பல்வாடி பகுதியில் கிடைக்கின்றன. எனவே தருமபுரி பகுதியிலும் இடைக் கற்காலத்தைத் தொடர்ந்து நுண்கற்கால மக்கள் வாழ்ந்தனர் என்பது தெளிவாகின்றது.

## புதிய கற்காலம் (Neolithic Culture)

தொல்பழங்கால வரலாற்றில் புதிய கற்காலம் ஒரு புரட்சிகரமான காலம் என்று கூறலாம். கல்லாயுதங்களைச் செய்வதில் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தியதுடன் கையால் செய்யப்பட்ட மட்கலங்களையும் செய்யத் தெரிந்திருந்ததால் இக்காலம் புதிய கற்காலம் என்று அழைக்கப்படுகின்றது. தென்னிந்தியாவில் முதன்முதலில் கர்நாடக மாநிலத்தில் உள்ள பிரம்மகிரி என்ற இடத்தில் புதிய கற்கால கல்லாயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தமிழகத்தில் பையம்பள்ளி என்ற இடத்தில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றுடன் மோதூர், மயிலாடும்பாறை ஆகிய அகழாய்வுகளில் புதிய கற்கால ஆயுதங்கள் கிடைத்துள்ளன.

புதிய கற்கால மக்கள் மலை அடிவாரங்களிலும் குகையைப் போன்ற தாழ்வான பகுதிகளிலும் வாழ்ந்துள்ளனர். தருமபுரி பகுதியில் புதிய கற்கால கல்லாயுதங்கள் செய்யும் தொழில் பட்டறைகள் கப்பல்வாடி, பர்கூர் மலை அடிவாரங்கள் காணப்படுகின்றன. கைக்கோடாரிகள், உளி. சுத்திகள்,

தேய்ப்பான்கள், சீவிகள் போன்றன கிடைத்துள்ளன. புதிய கற்கால கல்லாயுதங்கள் தருமபுரி பகுதியிலுள்ள பல கிராம தேவதை கோயில்களில் இன்றும் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன.

மிருகங்களுடன் மிருகங்களாக உணவுப் பொருட்களைத் தேடிச் சென்ற நிலையிலிருந்து வளர்ந்து உணவுப்பொருட்களை விளைவிக்கும் நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளனர். கால்நடைகளை வளர்க்கக் கற்றுக்கொண்டனர். ஓர் இடத்தில் தங்கி வாழ்ந்துள்ளனர் என்பது பையம்பள்ளி, கொல்லப்பள்ளி, தொகரப்பள்ளி, பன்னி மடுவு, தையல் மலை, முள்ளிக்காடு, மோதூர், மயிலாடும்பாறை ஆகிய அகழாய்வுகள் கூறுகின்றன.

கால்நடைகளை வளர்க்கத் தெரிந்திருந்தனர் என்பது தகடூர் பகுதியிலுள்ள பாறை ஓவியங்கள் கூறுகின்றன. இவர்களுடைய வாழ்விடங்கள், நீர் நிலைகள், சிற்றோடைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன.

# நடுகற்கள்

உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் வீர மரணம் எய்திய வீரர்களுக்கு தனி சிறப்பு காணப்படுகின்றது. இதைப்போன்று தமிழகத்தில் சங்க கால இலக்கியங்களிலும் வீரர்களைப் போற்றி பாடிய பாடல்கள் உள்ளன. பழந்தமிழர் போருக்கென்று தனி இலக்கணம் வகுத்தனர். இத்தகைய இலக்கண நூல்களான தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை ஆகியவற்றுடன் புறநானூறு மற்றும் அகநானூறு ஆகிய இலக்கியங்களிலும் போரைப் பற்றியும் வீரர்களைப் பற்றியும் விரிவாகப் பேசுகின்றன. அக்காலத்தில் இந்த இனக்குழு மக்களிடையே இந்த போர் முறையை ஏழு வகையாகப் பிரித்துள்ளனர். இவை பூகோள ரீதியான நிலப்பிரிவுகளோடு தொடர்புடையவை.

நிரையை (பசுமந்தை) கவருவது ‘வெட்சி’ என்றும் கவர்ந்த பசுமந்தையை மீட்டல் ‘கரந்தை’ என்றும் வழங்கப்பட்டது. இரண்டு அரசர்களுக்கு இடையே நடைபெறும் போர் ‘வஞ்சிப் போர்’ என்றும், கோட்டை மதிலைச் சூழ்ந்து முற்றுகை இடுவது ‘உழிஞைப் போர்’ என்றும், கோட்டைக்குள் இருந்து போர் செய்வது ‘நொச்சிப் போர்’ என்றும் பெயரிடப்பட்டுள்ளது. வீரத்தைக் காட்ட இரண்டு அரசர்களுக்கிடையே நடைபெறும் போர் ‘தும்பைப் போர்’ என்றும் இத்தகைய போர்களைத் தவிர ‘சேவல் சண்டை’ ‘தகர் (ஆடு) போர்’ போன்றவற்றிற்கு ‘வாகைப் போர்’ என்றும் இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய போர்களில் உயிர் நீத்த வீர மறவர்களுக்கு அவர்களின் நினைவாக வீரக்கல் எடுத்தனர். இதையே வீரக்கல் அல்லது நடுகல் என்று சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. சங்க காலத்திற்கு முன்பிருந்து நடுகல் எடுக்கும் வழக்கம் இருந்தது என்பதை தற்போதைய ஆய்வுகள் கூறுகின்றன. தொல் பழங்காலத்தில் காணப்படும் பெருங்கற்படைச் சின்னங்களின் வளர்ச்சியே இந்த நடுகற்கள் என்பது தெளிவாகியுள்ளன. இதைப் போன்ற நடுகற்கள் தருமபுரி பகுதியில் அதிக அளவில் காணப்படுகின்றன. தருமபுரி அகழ்வைப்பகத்தில் 35 நடுகற்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## பெயர்கள்

சங்க இலக்கியங்கள் வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நினைவுச் சின்னங்களைப் பதுக்கை, வல்லான் பதுக்கை, நடுகல், நெடுங்கல் என்று பல பெயர்களில் அழைக்கின்றன. இன்று இந்த நடுகற்களை வேடியப்பன், ஐயனார் அப்பன், சிலைக்கல், முனியப்பன், சாணாரப்பன் போன்ற பெயர்களில் வழிபடுகின்றனர்.

## கல் வீடு

தருமபுரி பகுதியில் சுமார் 150 நடுகற்களுக்கு மேல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை ஆறு, குளங்களின் கரைகள், கோயில்களின் அருகில் மற்றும் மலை அடிவாரங்களில் உள்ளன. சில நடுகற்கள் தனி கல்லாகக் காணப்படுகின்றன. பல நடுகற்கள் கல் வீடு அமைப்பில் உள்ளன. கல்வீடு அமைப்பிலுள்ள நடுகல்லில் வீரனின் உருவம் பொறித்த கல் கிழக்கு நோக்கி நடப்பட்டிருக்கும். இக்கல்லின் வடக்கிலும், தெற்கிலும் இரண்டு பலகைக் கற்கள் நடப்பட்டுள்ளன. இவை மூன்று கற்களையும் இணைத்து இதன்மேல் கூரையைப் போன்று மூடுகல் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இதற்கு கிழக்குப் பகுதியில் வாயில் போன்று திறந்த நிலையில் உள்ளன. இத்தகைய கல் வீடு அமைப்புடைய நடுகற்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்கியே காணப்படுகின்றன.

சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நடுகற்கள் ஒரே இடத்தில் உள்ளன. சில இடங்களில் 5 முதல் 10 நடுகற்கள் உள்ளன. ஒசூருக்கு அருகிலுள்ள நாகொண்டபாளையம் என்ற இடத்தில் 35 நடுகற்கள் ஒரே இடத்தில் உள்ளன. இவை "தொட்டவர் குடி" என்ற கோயிலின் முன் வரிசையாகக் காணப்படுகின்றன. தொட்டவர் குடி என்பது கன்னடச் சொல். அதாவது மூத்தவர்களின் கோயில் என்று இதற்கு பொருள். மூதாதையரின் வழிபாடு இப்பகுதியில் உள்ளன என்பதை இது கூறுகின்றது.

தருமபுரி பகுதியிலுள்ள கோயில்களில் கல்லாவி வேடியப்பன் கோயில் சிறப்பான கோயில்களில் ஒன்றாகும். இக்கோயிலின் கருவறையில் நடுகல் வேடியப்பனாக வழிபடப் படுகின்றது. இக்கோயிலில் கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம், திருச்சுற்று மற்றும் பரிவார ஆலயங்கள்

கட்டப்பட்டுள்ளன. பரிவார ஆலயங்களில் நடுகற்களே வழிபாட்டிலுள்ளன. இங்கு வைதீக கோயில்களைப் போன்று வழிபாடு நடைபெறுகின்றது.

## நடுகல்லின் அமைப்பு

நடுகற்களில் உள்ள வீரனின் உருவம் நின்ற நிலையில் காட்டப்பட்டிருக்கும். இரண்டு கரங்களில் வில், கத்தி, கேடயம், ஈட்டி போன்றவற்றைப் பிடித்த நிலையில் இருக்கும் வீரனின் புடைப்புச் சிற்பத்தின் அருகில் மங்கல சின்னங்களான குங்குமச் சிமிழ், கெண்டி, கண்ணாடி, சிவலிங்கம் போன்றவை காட்டப்பட்டிருக்கும். வீரனின் அருகிலும், மேல்பகுதியிலும் கல்வெட்டு வெட்டப்பட்டிருக்கும். இக்கல்வெட்டில் வீரமரணம் எய்திய வீரனின் பெயர், ஊர், எதற்காக உயிர் நீத்தான், அக்கால மன்னனின் பெயர், கல் எடுத்தவனின் பெயர் போன்ற விபரங்கள் காணப்படுகின்றன.

சில நடுகற்களில் அடுக்குமுறையில் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. மூன்று அடுக்குகளாக இச்சிற்பங்கள் அமைந்துள்ளன. நடுகல்லின் கீழ்ப்பகுதியில் வீரனின் சண்டைக் காட்சி இடம்பெற்றிருக்கின்றது. இரண்டாவது அடுக்கில் வீரனை தேவ கன்னியர்கள் இருவர் பக்கத்திற்கு ஒருவர் வீதம் அழைத்துச் செல்கின்ற காட்சி இடம் பெற்றிருக்கும். வீரனை இவர்கள் தேவலோகத்திற்கு அழைத்துச் செல்வதை இது குறிப்பிடுகின்றது. மூன்றாவது அல்லது மேல்பகுதியில் தேவலோகக் காட்சி காட்டப்பட்டுள்ளது. பொதுவாக தேவலோகக் காட்சியாக சிவன், நந்தி, சிவலிங்கம். சூரியன், சந்திரன் போன்றவை காணப்படுகின்றன. இவற்றுடன் வீரன் அஞ்சலி அஸ்தத்தில் நின்ற நிலையில் காட்டுவது வழக்கமாக இருந்துள்ளது. மூன்று அடுக்குகளைக் கொண்ட நடுகற்களில் இருந்து வீர மரணம் எய்திய வீரன் தேவலோகத்தை சென்று அடைகின்றான் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

முற்கால நடுகற்களில் இத்தகைய நிலை காணப்படவில்லை. முற்கால நடுகல்லில் வீரன் இறந்ததை மட்டும் காட்டப்பட்டுள்ளது. நடுகல் அமைப்பு முறையில் வளர்ச்சியடைந்த நிலையில்

இத்தகைய அமைப்பு காணப்படுகின்றது. இது சுவர்க்கம் என்று கூறப்படும் மேல் உலகை, வீரமரணம் எய்திய வீரர்கள் சென்றடைகின்றனர் என்ற தத்துவம் இணைக்கப்பட்டுள்ளது.

தருமபுரி அகழ்வைப்பகத்திலுள்ள நடுகற்களின் அமைப்பு மற்றும் கல்வெட்டு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1. தொறு கவருதல் மற்றும் மீட்டல் 2. காட்டு மிருகங்களுடன் போர் 3. நாட்டைக் காக்க உயிர் நீத்தவர்.

## தொறு பூசல்

தருமபுரி பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட றடுகற்களில் தொறு பூசலில் ஈடுபட்ட வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகற்கள் அதிக அளவில் உள்ளன. இதை கல்வெட்டுகளின் வாயிலாகவும், புடைப்புச் சிற்பங்களின் வாயிலாகவும் தெரிந்து கொள்ள முடிகின்றது. தருமபுரி பகுதியில் காடுகளும், மலைகளும் அதிகம் உள்ளதால் இங்கு கால்நடை வளர்ப்பு சமுதாயமே நிலைபெற்றிருந்தது. இவர்களுடைய முக்கிய தொழில் கால்நடை வளர்ப்பதே ஆகும். கால்நடை வளர்ப்புத் தொழிலுக்கு இன்றியமையாதது புல்வெளிகளேயாகும். இத்தகைய புல்வெளிகளைத் தேடி இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இதனால் ஒரு நாட்டில் இருந்த மக்களுக்கும் அருகிலுள்ள நாட்டு மக்களுக்கும் இடையே பூசல்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய பூசல்களில் உயிர்நீத்த வீரர்களுக்கு நடுகற்கள் எடுக்கப்பட்டு வழிபாடும் செய்யப்பட்டுள்ளது. தொறுபூசலில் உயிர் நீத்தவர்களின் நடுகற்கள் சில உள்ளன. அவற்றில் இரண்டு நடுகற்களின் விபரங்கள் மட்டும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## படுத்தான் கொட்டாய் நடுகல்

நடுகல்லில் வீரனின் உருவம் அதிக அளவில் புடைப்புத் தன்மை இன்றி உள்ளது. கைகளில் வில்லும், கத்தியும் உள்ளன. ஆடைகள், உடல் அமைப்பில் அங்க வேறுபாடுகள் காணப்பட வில்லை. வீரனின் கால் பகுதியில் கண்ணாடி, குங்குமச்சிமிழ் ஆகியன காணப்படுகின்றன. கட்டானை பருமரின் ஆட்சியாண்டில் கங்க வருமரின் சேவகன் தொறு மீட்டு பட்ட போது இறந்தான் என்ற செய்தியைக் கூறுகின்றது.

## கல்வெட்டு வாசகம்

1. சிரி பிரிதி கங்கதி கட்டானை பரு
2. மற்கு யாண்டு பத்தாவது கோவூர்
3. கங்க
4. வரும
5. ராள அவர் சே
6. வகர் கி
7. ளகன் பாடி
8. ய் யவாதிர
9. த் தாழ்வார்
10. தொறு மீட்டு
11. ப் பட்டான்

## கோட்டுருவ நடுகற்கள்

தருமபுரி பகுதியில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நடுகற்களில் பாப்பம்பாடி நடுகல் கல்வெட்டு காலத்தால் முற்பட்டது. இது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தது. ஆனால் பண்டைய தமிழ் இலக்கியங்கள் "எழுத்துடை நடுகல்" என்று குறிப்பிடுவது எழுத்தை மட்டுமின்றி ஓவியத்தையும் குறித்தது என்ற கருத்து உள்ளது. சங்க இலக்கியங்களில் 'எழுத்து' என்பதற்கு ஓவியம் என்ற பொருள் உள்ளது என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. பரிபாடலில் "எழுத்து நிலை மண்டபம்" என்று கூறுவது ஓவிய மண்டபம் என்று பொருள் உள்ளது. சங்க காலத்தில் தெய்வங்களை ஓவியமாக வரையும் பழக்கம் இருந்தது. மன்றத்தில் உள்ள சுதை மாடங்களில் வழிபடுவதற்கு ஓவியம் வரையப்பட்டு இருந்தன என்பதை பல அகப்பாடல்கள் கூறுகின்றன.

நடுகல் பெருங்கட்படை சின்னங்களில் இருந்து வளர்ச்சி அடைந்த நிலை என்ற கருத்து உள்ளது. தருமபுரி பகுதியில் உள்ள மல்லசந்திரம், மகாராஜகடை ஆகிய இடங்களில் உள்ள கற்திட்டைகளில் ஓவியங்கள் காணப்படுகின்றன. தேனி மாவட்டம் புலிமான் கோம்பையில் கிடைத்த தமிழ் பிராமி நடுகல் கல்வெட்டு

கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகும். எனவே முதலில் நடுகல் ஓவியமாக எழுதப்பட்டு பின்னர் வளர்ச்சி அடைந்த எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன என்பது தெளிவாகின்றது.

ஓவியமாக எழுதப்பட்ட நடுகல்லின் அடுத்த நிலை வீரனின் உருவத்தை கோட்டுருவமாக வரையப்பட்டுள்ளது. இத்தகைய கோட்டுருவ நிலையைக் கூறுவதற்கு இரண்டு நடுகற்கள் தருமபுரி அகழ்வைப்பகத்தில் உள்ளன. இவை பனையகுளம் மற்றும் பாப்பாரப்பட்டியிலிருந்து கொண்டுவரப்பட்டவை.

## பனையகுளம்

இந்த நடுகல்லில் உள்ள வீரனின் உருவம் கோட்டுருவமாகக் காணப்படுகின்றது. கல்வெட்டை வெட்டுவது போன்று வீரனின் உருவம் பள்ளமாக்கிக் காட்டப்பட்டுள்ளது. வீரன் உருவம் சிறிய அளவிலும். வலது கையில் சிறு கத்தியும், இடது கையில் வில்லும் உள்ளன. இது பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் காலத்ததாக தெரிகின்றது. இதன் காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டாக இருந்த போதும் நடுகல் வளர்ச்சி நிலையின் எச்சம் இக்கல்வெட்டில் காணப்படுகின்றது.

## கல்வெட்டு

1. கோவி யை (பந்)
2. மக்கி யாண்டு
3. (பன்னிரண்டாவது)
4. க்ச
5. ம
6. ம
7. . . . .
8. . . . ரைச
9. ரு சேவகரு
10. ஆவிசி அடக
11. ங்க

12. . . . .
13. ட்டான்
14. கல்

## பாப்பாரப்பட்டி நடுகல்

தருமபுரி அருகிலுள்ள பாப்பாரப்பட்டி என்ற ஊரிலிருந்து கொண்டு வரப்பட்ட இந்த நடுகல் சிறிய நடுகல்லாகும். இதன் உயரம் 55 செ.மீ கோட்டுருவ நடுக்கல்லுக்கு இதுவும் குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டாகும். இதிலுள்ள வீரன் நின்ற நிலையில் வலது கரத்தை மடித்தும், இடது கரத்தில் வில்லை ஏந்திய நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. இக்கோட்டுருவத்தின் வலது புறமும், இடது புறமும் கல்வெட்டு உள்ளது. நடுகல்லில் உள்ள வீரனின் உருவம் கல்வெட்டு எழுத்துக்களைப் போன்று காணப்படுகின்றது. இது கி.பி.7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருந்தாலும் நடுகல் புடைப்புச் சிற்பத்தின் வளர்ச்சி நிலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

## கல்வெட்டு

1. (கோ)
2. வியை
3. யப
4. ருமற்கு
5. பந்நி
6. ரண்டாவது
7. ஊர்
8. பொருளெரிந்
9. து பட்ட(ன்)று
10. . . .க்கா
11. . . றகிக
12. . . .

## படுத்தான் கொட்டாய்

ஊத்தங்கரை வட்டம் படுத்தான் கொட்டாய் என்ற ஊரிலிருந்து இரண்டு நடுகல் கல்வெட்டுக்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஒன்று மகேந்திரவர்மனின் காலத்தியது. இரண்டாவது கங்க மன்னர்களின் காலத்தைச் சார்ந்தது. நடுகல்லில் வீரனின் உருவம் நின்ற நிலையிலும், இரண்டு கரங்களில் வில்லும், குறுவாளும் காட்டப்பட்டுள்ளன. வீரனின் உருவம் சிறிது புடைத்துக் காணப் படுகின்றது. வீரனின் உருவத்தில் அதிக வேறுபாடுகள் காட்டப்படவில்லை. ஆடை மற்றும் தலை அலங்காரம் ஆகியவற்றைத் தவிர மற்ற விபரங்கள் இல்லை.

மகேந்திரவர்மனின் பதினைந்தாவது ஆட்சி ஆண்டில் கோவூர் நாட்டு கீழ்வழிப் பள்ளகூரில் வாழும் நஞ்சுணியாரின் மகன் கொற்றாடை ஆநிரை மீட்டும் போது உயிர் நீத்த செய்தி கல்வெட்டாகக் காணப்படுகின்றது.

### கல்வெட்டு

1. கோவிசைய மயீந்திர பருமற்கு
2. ப்பதினைந்தாவது கோவூர் நாட்டுக்கீ
3. ழ்வழிப் ப
4. ள்ளகூர் இருந்து
5. வாழுந் நஞ்சுணி
6. ஆர் மகன் கொற்
7. றாடை தொறு
8. மீட்டுப் ப
9. ட்டான் கல்

## சந்தூர் நடுகற்கள்

கிருட்டிணகிரி மாவட்டம் சந்தூரிலிருந்த 7 நடுகற்கள் தருமபுரி அகழ்வைப்பகத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றில் கல்வெட்டுக்கள் உள்ளன. 6 நடுகல் கல்வெட்டுக்கள் வட்டெழுத்திலும் ஒன்று தமிழ் எழுத்திலும் காணப்படுகின்றன.

இவற்றில் இப்பகுதி எயில் நாடு என்றும், சந்திரபுரம் என்றும் ஊர்கள் குறிப்பிடப்படுகின்றன. இப்பகுதியை கட்டாணைபருமர் என்ற குறுநிலத்தவர் ஆட்சி செய்துள்ளனர்.

## கல்வெட்டு : கி.பி. 597

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய மயி
2. ந்திர பருமற்கு யாண்
3. டு ஏழாவது பெரும்
4. பாண விள வரைசர்
5. சேவகன் நையவ
6. டுகன் (சாத்துழான்) தொ
7. றுமீட்டு
8. பட்டான்

மகேந்திரவர்மனின் காலத்தில் இப்பகுதியை பெரும்பாண இளவரசர் என்பவர்கள் தலைவர்களாக இருந்துள்ளனர். இவர்களுடைய கால்நடைகளை மீட்ட போது பெரும்பாண இளவரசர் சேவகன் நையவடுகன் என்பவர் உயிர் நீத்தார். இவருக்காக எடுக்கப்பட்ட நடுகல் இது.

## சந்தூர் நடுகல் -2

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. கட்டாணை பருமற்கு யாண்டு
3. முப்ப தாவது பெரும்பாணி
4. ளவரைசர் எயி நாட்டு சந்
5. திரபுரம் எறிந்த ஞான்று ப
6. ட்டார் (மிணலூர்) சேட்டனார்

கட்டாணைபருமரின் 30-ஆவது ஆட்சியாண்டின் போது பெரும்பாண இளவரசர்கள் சந்திரபுரத்தை படையுடன் வந்து எதிர்த்தபோது அவருடைய சேவகன் சேட்டனார் என்பவர் இறந்தார் என்று கல்வெட்டு கூறுகின்றது. இதிலிருந்து இப்பகுதி எயில் நாட்டின் பகுதியாக இருந்தது என்பதும் தற்போதைய சந்தூரின் பழைய பெயர் சந்திரபுரம் என்று இருந்தது என்றும் தெரியவருகின்றது.

இந்நடுகற்களில் உள்ள வீரனின் புடைப்புச் சிற்பங்கள் அதிக அளவில் பெரிய உருவங்களாகவும், புடைப்புத் தன்மை இன்றியும் காணப்படுகின்றன. இந்த புடைப்புச் சிற்பங்களின் புடைப்புத் தன்மை அதிக (Projection) இல்லாததால், ஆடை, அணிகலன்கள் ஆகியவற்றில் அதிக வேறுபாடுகள் காண இயலவில்லை. மங்கல சின்னங்களான கெண்டி, கண்ணாடி அகியனவும் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் வட்டெழுத்தின் வளர்ச்சி நிலையைத் தெரிந்துகொள்ள பெரிதும் உதவுகின்றன.

## காட்டு மிருகங்களுடன் சண்டை

காட்டு மிருகங்களுடன் வீரமாக எதிர்த்து சண்டை செய்து உயிர் நீத்த வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகற்கள் நான்கு தருமபுரி அகழ்வைப்பகத்தில் உள்ளன. இவை புலிகுத்தி பட்டான், பன்றி குத்திபட்டான் என்று இருவகைப்படும். இத்தகைய நடுகற்களில் சிலவற்றில் கல்வெட்டுக்கள் உள்ளன. சிலவற்றில் கல்வெட்டு இன்றி புடைப்புச் சிற்பங்கள் மட்டும் காணப்படுகின்றன.

## புலிகுத்தி பட்டான்

1. *ஸ்வஸ்திஸ்ரீ* கட்டாணை பருமற்கு யாண்டு நாற்பத்தைந்தாவது பெரும்
2. பாணிளவரைசர் வேளால நாடாள பெருமுகை கலியட
3. க்கியார் சேவகன் கட்டிய விச்சன்
4. புலிக் குத்திப்பட்டான்

இக்கல் சந்தூரிலிருந்து கொண்டுவரப்பட்டது. வலது கையிலுள்ள கத்தி புலியின் வாயில் உள்ளது. இடது கையிலுள்ள குறுவாள் தலைக்கு மேலாக குத்துவதற்குத் தயாராக உள்ளது. புலியுடன் வீரன் போரிடுகிறான். இந்த புடைப்புச் சிற்பத்தின் மேல் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.

## ஆலந்தூர் கல்வெட்டு

ஊத்தங்கரை வட்டம் ஆலந்தூரிலிருந்து கொண்டுவரப்பட்ட நடுகல் மிகப்பெரிய நடுகல்லாகும். வீரனின் முன்பாக புலி ஒன்று பாய்ந்து வருகின்ற நிலையில் காணப்படுகின்றது. வீரன் இரண்டு கைகளிலும் ஈட்டியைப் பிடித்துப் புலியைக் குத்துகின்றான். ஈட்டியின் முனை புலியின் உடலில் பாய்ந்து மறுபுறத்தில்

வந்துள்ளது. வீரனின் இடையில் கச்சையும், வாளும் உள்ளன. கல்வெட்டு வீரனின் இடது புறத்தில் சிதைந்த நிலையில் காணப்படுகின்றது. இதில் வீரனின் விபரம் தெரியவில்லை. ஆனால் விஜயநகர மன்னன் முக்கண்ண உடையார் காலத்தில் ஐப்பசி மாதம் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது என்பது மட்டும் தெரிகின்றது.

## பிக்கனஅள்ளி நடுகல்

தருமபுரி அகழ்வைப்பகத்திலுள்ள நடுகற்களில் இரண்டு நடுகற்கள் குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் கல்வெட்டு இல்லை. வீரன் நின்ற நிலையில் ஒரு கையில் குறு வாளை ஏந்திய நிலையிலும், மற்றொரு கையில் உள்ள குறுவாள் புலியின் கழுத்துப் பகுதியில் குத்திய நிலையிலும் காணப்படுகின்றான். இடையில் இடைக்கச்சும், குறுவாளும், தலையில் ஒரு புறம் கொண்டையிட்ட நிலையிலும் காட்டப்பட்டுள்ளான். புலி இரண்டு கால்களில் நின்ற நிலையிலும் வீரனை நோக்கிக் காணப்படுகின்றது. வீரனின் வலதுபுறம் பெண் ஒருத்தி கையில் பை ஒன்று வைத்த நிலையிலும் காணப்படுகின்றது. புலியின் தலையிலும், வயிற்றிலும் இரண்டு நாய்கள் கடிப்பது போன்று உள்ளன. இந்த புடைப்புச் சிற்பம் வளர்ச்சியடைந்த புடைப்புச்சிற்பமாக உள்ளதால் சிற்பத்தைப் போன்று காணப்படுகின்றது.

இரண்டாவது புலிகுத்தி பட்டான் கல்லிலும் கல்வெட்டு இல்லை. இதில் வீரன் புலியுடன் சண்டை செய்யும் காட்சியும் புலியின் மேல் புறம் வீரன் குதிரையின் மேல் செல்லுகின்ற காட்சியும் இடம் பெற்றிருக்கின்றன.

## மதிகோன்பாளையம் கல்வெட்டு

தருமபுரியிலுள்ள மதிகோன்பாளையம் என்ற பகுதியிலிருந்து நடுகற் சிற்பம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இந்த நடுகல் தமிழ் கல்வெட்டுடன் காணப்படுகின்றது. நடுகல்லில் வீரன் நின்ற நிலையில் அம்புகளால் தைக்கப்பட்டும் காணப்படுகின்றான். வீரனின் இரண்டு புறங்களிலும் கல்வெட்டு காணப்படுகின்றது.

## கல்வெட்டு

"சுவஸ்திஸ்ரீ அரிமிதைய மாவலிவாணராயர் கங்க நாடும், புறமலை நாடும், கோயினூர் நாடும், கோவூர் நாடும், தாயனூர் நாடும், பற்ற நாடும் ஆள அவர்க்கு தான் ஆகி பிள்ளை கொண்டு உள்புகுந்து வஞ்சித்து நாடு கொண்டான் நுளம்பன். அவன் போரில் கருப்பிணி அருளராக அவளைக் காத்திருந்து ஆண்பிள்ளை பெறுவதும், தகடூர் புகுந்து நுளம்பன் பலத்தோடே துணிந்து நாடு பாவினார் சங்கரக் குட்டியார் அவரோடு உடன்புகுந்து தகடூரில் மீட்டார் நாகந்தை சங்கரக்குட்டியார் கல்நாடு"

தகடூர் பகுதியை அரிமிறை மாவலிவாணராயர் ஆட்சி செய்தபோது நுளம்பர் நயவஞ்சகமாக நாடு பாவினார். அப்பொழுது கர்ப்பிணியாக இருந்த பெண்ணைக் காத்து ஆண்பிள்ளை பெற்றதும் நுளம்பர்களுடன் போரிட்டார். அந்த போரில் தகடூரை மீட்டதுடன் சங்கரகுட்டியாரும் உயிர் இழந்தார் என்ற செய்தியை இது கூறுகின்றது.

## நவகண்டம்

நவகண்டம் என்பது உடலில் உள்ள ஒன்பது அங்கங்களில் ஒன்றை வெட்டி கொற்றவைக்குக் காணிக்கையாகத் தருவது நவகண்டம் என்று அழைக்கப்படுகின்றது. சைவ சமயத்தின் பிரிவினர்களாகிய காளாமுகர், காபாலிகர், பாசுபதத்தினர் வீரபத்திரர் போன்றவர்கள் நவகண்டம் கொடுத்து வழிபட்டனர். இத்தகைய நவகண்ட சிற்பங்கள் தகடூர் பகுதியில் காணப்படுகின்றன. தருமபுரி அகழ்வைப்பகத்தில் மூன்று நவகண்ட சிற்பங்கள் உள்ளன. இவை குந்தாணி, பெண்ணேஸ்வர மடம் ஆகிய இடங்களில் இருந்து கொண்டு வரப்பட்டவை. இக்கற்கள் "தலைபலி தூங்கு தலை கொடுத்தல்" போன்ற மற்ற பெயர்களும் பெறுகின்றன.

கொற்றவைக்குத் தன் தலையைத் தானே வெட்டிக் கொடுத்த செய்திகள் சிலப்பதிகாரம், கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி போன்ற இலக்கியங்களில் உள்ளன. காவேரிப்பூம்பட்டினத்தில் ஒரு பகுதியான மருவூர் பகுதியில் உள்ள

மறவர்களும் பட்டினப்பாக்கத்திலுள்ள வீரர்களும் போர் தொடங்குவதற்கு முன்னர் சென்று பலிபீடத்தில் தலையை வைத்துக்கொண்டு எம் அரசருக்கு துயரம் ஒழித்து தருக என்று தலையை பலியாகக் கொடுத்தனர். இவர்களை "பலி கொடை புரிந்தோர்" என்று கூறுகின்றனர்.

## குந்தாணி நவகண்டம்

குந்தாணியிலிருந்து கொண்டு வரப்பட்ட நவகண்ட சிற்பம் செவ்வக அமைப்பில் உள்ள பலகைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. வீரன் நின்ற நிலையில் தன்னுடைய வலது கரத்தால் அவனுடைய தலையை வெட்டுகின்ற நிலையில் காணப்படுகின்றது. நீண்ட கத்தி ஒன்று கழுத்தின் பின்புறம் காட்டப்பட்டுள்ளது. வீரனின் கழுத்தில் பல அணிகலன்கள் காணப்படுகின்றன. வீரனின் தலைமுடி வலது பக்கம் கொண்டை இட்ட நிலையில் உள்ளது.

வெட்டிய தலையை கூடை போன்ற ஒன்றில் வைத்து அதைத் தன் தலையின் மேல் வைத்துக் கொண்டு செல்வது போன்ற சிற்பம் அருகில் உள்ளது. தலையை எடுத்து செல்பவர் குதிரையின் மேல் அமர்ந்து கூடையை இரண்டு கைகளில் பிடித்தவாறு செல்வதாகக் காட்டப்பட்டுள்ளது. தலையை வெட்டிக் கொடுத்த காட்சியும், வெட்டிய தலையை குதிரையின் மேல் அமர்ந்து செல்லுகின்ற காட்சியும் ஒரே கல்லில் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன. இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## பெண்ணேஸ்வரமடம் நவகண்டம்

கிருட்டிணகிரிக்கு அருகிலுள்ள பெண்ணேஸ்வரமடம் என்ற இடத்திலிருந்து இரண்டு நவகண்ட சிற்பங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. நின்ற நிலையிலுள்ள வீரனின் தலையில் உச்சிக் கொண்டை இடப்பட்டுள்ளது. கழுத்தில் ஆபரணங்களும், இடைக்கச்சும் உள்ளன. தன்னுடைய இரண்டு கைகளால் கத்தியைப் பிடித்திருக்கும் நிலையிலும், கத்தி கழுத்தின் பின்புறமும் காட்டப்பட்டுள்ளது. இதன் அமைப்பு தன் தலையைத் தானே வெட்டி காணிக்கை ஆக்கும் நிலையில் காணப்படுகின்றன. இவை கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

## சதிகற்கள்

வீரனுக்கு மட்டுமின்றி வீரபத்தினிக்கும் நடுகல் எடுப்பது வழக்கமாக இருந்தது என்பதை இலக்கியங்கள் கூறுகின்றன. கற்புடைய மாதர்களின் கணவர் இறந்தபின் உயிர்வாழ்வதில்லை என்பதும் கணவன் இறந்தபின் உயிர்நீத்தனர் என்பதும் பழங்கால வழக்கம். இத்தகைய செயலை "உடன்கட்டை ஏறுதல்" அல்லது "சதி" என்று கூறுகின்றனர். இக்கற்களுக்கு "சதிக்கல், மகாசதிக்கல், மாஸ்திக்கல், தீப்பாய்ந்த அம்மன், உடன்கட்டை ஏறுதல்" என்று பல பெயர்கள் காணப்படுகின்றன. இதைப் போன்ற கற்கள் வட இந்தியாவில் அதிக அளவிலும் தென்னிந்தியாவில் பரவலாகவும் உள்ளன.

## அமைப்பு

நடுகற்களில் வீரனின் அருகில் பெண் தன்னுடைய வலது கையைத் தூக்கி கைவிரல்களை விரித்த நிலையில் காட்டுகின்றவாறு உள்ளது. சில பெண் உருவங்களின் கைகளில் கண்ணாடி, எலுமிச்சம்பழம், குங்குமச் சிமிழ், பூச்செண்டு போன்ற உருண்டையான பொருட்களை கையில் வைத்திருப்பார்கள். சிலவற்றில் பெண்ணின் உருவமின்றி "ட" வடிவத்தில் கையை கம்பத்துடன் இணைத்துக் காட்டுவதும் வழக்கமாக உள்ளது. இதனால் இதற்கு "தோள் கொடுத்தல்" என்றும் பெயரிடப் பட்டுள்ளன.

தருமபுரி அகழ்வைப்பகத்திலும் சதிக்கற்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்கற்களில் பெண் வீரனின் அருகில் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளாள். மன்னனுடைய கையைத் தூக்கி விரலை விரித்த நிலையில் இப்பெண்ணின் கைகள் காணப்படுகின்றன.

தருமபுரி பகுதியில் சில இடங்களில் பெண் தீச்சுடரில் அமர்ந்திருப்பது போன்ற புடைப்பு சிற்பத்துடன் காட்டப்பட்டுள்ளாள்.

# சிற்பங்கள்

தருமபுரி பகுதியில் உதிரியாகக் கிடைத்த சிற்பங்கள் சேகரித்துப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை மூன்று வகைகளாகக் காணப்படுகின்றன. அவை சைவ, வைணவ சிற்பங்கள், பௌத்த சிற்பங்கள் மற்றும் சமண சிற்பம். தகடூர் பகுதியில் நடுகல் வழிபாடே அதிக அளவில் இடம் பெற்றிருந்ததால் மற்ற சமயங்களின் அடிப்படையில் உருவான சிற்பங்கள் குறைவு. இப்பகுதி மக்களின் வாழ்க்கையில் நடுகல் வழிபாடு பின்னிப் பிணைந்து வளர்ந்துள்ளது. இது அரச மரபினர்களால் வளர்க்கப்படவில்லை. எனவே நடுகல் சிற்பங்கள் அதிகம் உள்ளன. மற்ற சமயங்கள் அரச மரபினர்களால் வளர்க்கப்பட்டன. தகடூர் பகுதியில் ஒரு நிலையான அரசு ஏற்படாததால் மற்ற சமயங்களின் சிற்பங்கள் குறைந்து காணப்படுகின்றன.

## கொற்றவை

மூன்று கொற்றவைச் சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் நின்ற நிலையில் உள்ள கொற்றவை காலத்தால் முற்பட்டது. நுளம்பர்களின் சிற்பக்கலை சாயலில் உருவாக்கப்பட்டுள்ளது. எட்டுக்கரங்களுடனும், கரண்ட மகுடத்துடனும் காணப்படும் இச்சிற்பத்தின் கைகளில் சங்கு, சக்கரம், சூலம், கேடயம், கத்தி போன்றன காணப்படுகின்றன. மார்புக்கச்சையும், இடையில் தடித்த ஆடையும், உதரபந்தமும் உள்ளன. இரண்டு கால்களில் ஒன்று மகிசனின் எருமைத் தலையின் மீதும், மற்றொன்று நேராக நின்ற நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. பின்புறம் சிம்ம வாகனமும் உள்ளது. இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம்.

குந்தாணியிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள காளியின் சிற்பம் ஒன்று அமர்ந்த நிலையில் காணப்படுகின்றது. தலையில் சுவாலை மகுடமும், நான்கு கரங்களும் உள்ளன. உடுக்கை, பாசம், சூலம். கபாலம் ஆகியன நான்கு கைகளில் காணப்படுகின்றன. மார்புக்கச்சை இல்லை. முப்புரி நூல், ஆடை

ஆகியன நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் கூடியன. இச்சிறபத்தின் உருவ அமைதி மற்றும் ஆடை அணிகலன்களைக் கொண்டு இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது.

## விநாயகர்

நின்ற நிலையில் உள்ள விநாயகர் சிற்பம் ஒன்று தீர்த்தம் என்ற ஊரிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது. தலையில் கரண்ட மகுடமும், நான்கு கரங்களும் உள்ளன. யானையின் முகம் விரிந்த காதுகள், பெருத்த வயிறு காட்டப்பட்டுள்ளன. உதரபந்தம் தடித்த நிலையில் உள்ளது. அங்குசம், பாசம், உடைந்த தந்தம் மற்றும் மோதகம் ஆகியன கைகளில் உள்ளன. சன்னவீரம் காணப்படுகின்றது. இந்த சிற்பத்தின் உருவ அமைதியைக் கொண்டு இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கணிக்கப் படுகிறது.

## தென்முகக் கடவுள்

தீர்த்தம் என்ற ஊரிலிருந்து தென்முகக் கடவுள் சிற்பம் ஒன்று உடைந்த நிலையில் கொண்டுவரப்பட்டுள்ளது. இச்சிற்பம் ஆலமரத்தின் கீழ் அமர்ந்துள்ள நிலையில் உள்ளது. நான்கு கரங்களில் ஒன்று உடைந்துள்ளது. நெருப்பு, பாசம், சின்முத்திரை ஆகியன காட்டப்பட்டுள்ளன. விரிசடை, முப்புரிநூல், உதரபந்தம் ஆகியன அழகாகக் காட்டப்பட்டுள்ளன. முயலகன் மேல் ஒரு காலை வைத்துள்ள தென்முகக் கடவுளின் மற்றொரு கால் உடைந்துள்ளது. காலின் கீழ் சனகாதி முனிவர்கள் காணப் படுகின்றனர். இச்சிற்பத்தின் உருவ அமைதியையும் ஆடை அணிகலன்களையும் கொண்டு இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம்.

## குழல் ஊதும் கண்ணன்

குழல் ஊதும் கண்ணன் வடிவில் உள்ள விஷ்ணுவின் சிற்பம் ஒன்று புடைப்புச் சிற்பத்தின் அமைப்பில் காணப்படுகின்றது. மாதேமங்கலத்திலிருந்து கொண்டுவரப்பட்ட இச்சிற்பம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். கண்ணன் குழல் ஊதுகின்ற நிலையிலும், பின்னிரண்டு கைகளில் சங்கு, சக்கரம் ஆகியவற்றுடனும் நின்றநிலையில் காட்டப்பட்டுள்ளது. கண்ணனின்

இரண்டு பக்கங்களிலும் 7 பெண்கள் அக்குழலில் மயங்கி நிற்கின்றனர். இப்பெண்கள் பலவகையான தலை அலங்காரங்களுடனும் இரண்டு கரங்களுடனும் நிற்கின்றனர். இச்சிற்பத்தின் கீழே காட்டில் கால்நடைகள், பாம்பு போன்றன குழல் இசையில் மயங்கி, இசை வரும் திசையை நோக்கி நிற்கின்ற நிலையில் காணப்படுகின்றன. காட்டைக் காட்ட மரம் காட்டப்பட்டுள்ளது.

மேற்கண்ட சிற்பங்களுடன் அகத்தியர், நின்ற நிலையில் திருமால், நந்தி, யானை போன்ற சிற்பங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

## புத்தர்

தருமபுரிக்கு அருகிலுள்ள கடகத்தூர் என்ற ஊரிலிருந்து இரண்டு புத்தர் சிற்பங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. நின்ற நிலையிலுள்ள புத்த சிற்பம் கலை நுணுக்கம் வாய்ந்தது. இரண்டு கரங்களுடன் காணப்படும் புத்தர் நின்ற நிலையில் உள்ளார். ஒரு கை உடைந்த நிலையிலும், மற்றொரு கையில் அபய முத்திரையுடனும் காணப்படுகின்றார். தலையில் சுருண்ட முடியும் அதன்மேல் உஷ்ணிசம் சுவாலை அமைப்பில் காட்டப்பட்டுள்ளன. ஆடை உடல் முழுவதும் காணப்பட்ட போதிலும் கோடுகளாகக் காணப்படுகின்றன. ஆடை அமைப்பு இரண்டு கைகளில் இருந்து கால்வரை காட்டப்பட்டுள்ள அமைப்பு முறை ஆந்திர மாநிலத்திலுள்ள அமராவதி சிற்பச் சாயலின் அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. இது அமராவதி சிற்பத்தின் அமைப்பில் உள்ளது என்றால் அது மிகையாகாது. தலையின் பின்புறமுள்ள பிரபாவளி நீண்டு தொங்குகின்ற காதுகள் இதற்கு மேலும் ஆதாரங்களாக அமைகின்றன. இச்சிற்பத்தின் அமைப்பைக் கொண்டு இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம்.

## அமர்ந்தநிலையிலுள்ள புத்தர்

அமர்ந்த நிலையில் உள்ள புத்தர் சிற்பம் மிகப்பெரிய சிற்பமாகும். இச்சிற்பத்தின் உயரம் 90 செ.மீ. அகலம் 1.15 மீட்டர். இரண்டு கால்களையும் மடக்கி அமர்ந்த நிலையிலும், இரண்டு கரங்களும் ஒன்றின் மீது ஒன்றை வைத்து தியான நிலையிலும் அமர்ந்துள்ளார். ஆடை உடல் முழுவதும் கால்வரை

காணப்படுகின்றது. ஆடையைக் காட்ட கோடுகள் மட்டும் உள்ளன. மெல்லிய ஆடையைக் காட்டுவதற்காக இத்தகைய அமைப்புக் காட்டப்பட்டுள்ளது. இதைப்போன்ற பெரிய சிற்பங்கள் தஞ்சைப் பகுதியில் மட்டும் உள்ளன. இதன் உருவ அமைப்பைக் கொண்டு இதுவும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம்.

## சமண சிற்பம்

பெரிய கல் ஒன்றில் இரண்டு சமண அடியார்கள் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளனர். இது தருமபுரியிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். இரண்டு சமண அடியவர்களும் ஒருவரை அடுத்து ஒருவர் காட்டப்பட்டுள்ளனர். சதுர அமைப்பில் கட்டம் போன்ற அமைப்பும் இதன் மையப் பகுதியில் அரைவட்ட அலங்காரமும் காட்டப்பட்டுள்ளது. இரண்டு அடியவர்களும் இரண்டு கால்களை மடக்கி அமர்ந்த நிலையிலும், இரண்டு கரங்களைத் தியான நிலையில் மடக்கி மடியில் வைத்திருப்பது போன்றும் வடிக்கப் பட்டுள்ளனர். தலையில் சுருண்ட முடியுடன் ஓர் அடியவர் காணப்படுகின்றார். நுளம்பர்களின் காலத்தில் தருமபுரியில் சமணக் கோயில் ஒன்றை வணிகனின் மக்கள் நீதியண்ணன், சண்டியண்ணன் ஆகிய இருவரும் கட்டியதாகக் கன்னடக் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. இந்த இரண்டு சமணர்களின் சிற்பமாக இவை இருக்கலாம். இவையும் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு சிற்பங்களாக இருக்கின்ற காரணத்தால் கோயிலும் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு கட்டப்பட்டுள்ளது என்று கருதலாம்.

## தகடூர் பகுதியில் சிற்பக்கலை

தமிழகத்தின் மற்ற பகுதிகளைப் போன்று தகடூர் பகுதியில் சிற்பக்கலையில் தனித்தன்மை காணப்படவில்லை. இங்கு நுளம்பர்களின் சிற்பக்கலை, சோழர்களின் சிற்பக்கலை மற்றும் விஜயநகர மன்னர்களின் சிற்பக்கலை சாயல்கள் காணப்படுகின்றன. மற்ற பகுதிகளில் உள்ள சிற்பக்கலையின் தாக்கங்களே உள்ளன. ஆனால் நடுகற்களில் மட்டும் தகடூர்க்கென்று தனித்தன்மை காணப்படுகின்றது. நடுகற்களில் காணப்படும் புடைப்புச் சிற்பங்களில் அதன் வளர்ச்சி நிலைகள் காணப்படுகின்றன.

நடுகற்களில் உள்ள புடைப்புச் சிற்பங்கள் பெருங்கற்படைச் சின்னங்களில் வரையப்பட்ட ஓவியங்களில் இருந்து வளர்ச்சி அடைந்துள்ளன. மல்லசந்திரம், மகாராஜகடை ஆகிய

கல்திட்டைகளில் உள்ள ஓவியங்கள் இதற்கு உதாரணமாக அமைந்துள்ளன. இதனுடைய அடுத்த வளர்ச்சி நிலையாக வீரர்களின் உருவங்கள் நடுகற்களின் கோட்டுருவங்களாகக் காணப்படுகின்றன. முற்கால நடுகற்களில் இந்த கோட்டுருவங்கள் கல்வெட்டைப் போன்ற அமைப்பில் உள்ளன.

இதைத் தொடர்ந்து கோட்டுருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக வளர்ச்சி பெற்றுள்ளன. இத்தகைய புடைப்புச் சிற்பங்கள் கல்லில் அதிக அளவில் புடைப்புத்தன்மை (Projection) இன்றி காணப்படுகின்றன. இவற்றில் வீரனின் உருவத்தைத் தவிர மற்ற வேறுபாடுகள் காணப்படவில்லை. இதைப்போன்ற புடைப்புச் சிற்பங்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை உள்ள நடுகற்களில் காணமுடிகின்றது. கி.பி. 8-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உள்ள நடுகற்களில் வீரனின் புடைப்புச் சிற்பத்துடன் மங்கலச் சின்னங்கள் இடம் பெற்றுள்ளன. கண்ணாடி, குங்குமச்சிமிழ், கெண்டி போன்றன குறிப்பிடத்தக்கன. இவற்றுடன் வீரன் சண்டை செய்யும் காட்சியும் இடம்பெற்றுள்ளது.

சோழர்கள் தகடூர் பகுதியைக் கைப்பற்றிய பின்னர் இப்பகுதி நடுகற்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வீரமரணம் எய்திய வீரன் மரணத்திற்குப் பின்னர் சொர்க்கம் செல்கின்றான் என்ற கோட்பாடு சிற்ப வடிவில் இடம்பெற்றுள்ளது. இதனால் நடுகற்களில் வீரன் சண்டை செய்யும் காட்சி கீழ்ப்பகுதியிலும், அதைத் தொடர்ந்து தேவமாதர்கள் வீரனை அழைத்துச் செல்கின்ற காட்சியும், இறுதியில் தேவலோகக் காட்சியும் இடம்பெற்றுள்ளன. இக்காட்சிகள் நடுகற்களில் படிப்படியாகக் காட்டப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து விஜயநகர மன்னர்களின் காலத்தில் நடுகற்களில் உள்ள புடைப்புச் சிற்பங்கள், சிற்பங்களின் அமைப்பில் செதுக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் சிற்பங்கள் பெரிய அளவிலும், தனிச்சிற்பங்கள் என்ற வகையிலும் வடிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டைக் காட்டிலும் சிற்பங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். எனவே விஜயநகர மன்னர்களின் காலத்தில் நடுகற்கள் தனிச்சிற்பங்களைப் போன்று வளர்ச்சி பெற்றன என்றால் அது மிகையாகாது.

# பெருவழிக் கற்கள்

அதியமான் மரபினர் தகடூர் பகுதியை ஆட்சி செய்தனர் என்பது முன்னர் கூறப்பட்டுள்ளது. இவர்களின் வழிவந்த இடைக்கால அதியமான்கள் இரண்டு பெருவழி கற்களை அமைத்துச் சென்றுள்ளனர். பெருவழி கற்கள் இரண்டும் தருமபுரி பகுதியிலுள்ள பதிகால்பள்ளம் மற்றும் கண்டமங்கலம் ஆகிய இரண்டு இடங்களில் உள்ளன. இவற்றில் பதிகால்பள்ளத்திலிருந்த பெருவழி கல் தற்போது பாதுகாப்பின் பொருட்டு தருமபுரி அகழ்வைப்பகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டின் வாசகம்

அதியமான் பெருவழி
நாவற் தாவளத்திற்குக்
காதம் 27

மற்றொரு கல்வெட்டில்

அதியமான் பெருவழி
நாவற் தாவளத்திற்குக்
காதம் 29

என்று எழுதப்பட்டுள்ளது. காதம் 27 என்ற எண்ணுக்கு அருகில் இரண்டு பெரிய துவாரமும், ஏழு சிறிய துவாரமும் (பள்ளமான பகுதிகள்) செய்யப்பட்டுள்ளன. பெரிய துவாரங்கள் இருபதையும், சிறிய துவாரங்கள் ஏழு என்ற எண்ணையும் குறிப்பிடுகின்றன. இதை பாமர மக்கள் எளிதில் தெரிந்துகொள்ள ஏதுவாக இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. இவற்றுடன் தமிழ் எழுத்தில் எண்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதைப்போன்ற பெருவழிக்கற்கள் வேறு சில இடங்களிலும் காணப்படுகின்றன. படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் இது உள்ளது. நாவற்தாவளம் என்ற ஊருக்குச் செல்லும் பெருவழிக்கு அதியமான் பெருவழி என்று அவர்களுடைய மரபினரின் பெயரை வைத்திருப்பது

குறிப்பிடத்தக்கது. நாவற்தாவளம் என்ற ஊர் எங்கு இருந்தது என்பது இதுவரை கண்டுபிடிக்க இயலவில்லை. இக்கல்வெட்டுக்களில் உள்ள எழுத்துக்களின் அமைப்பைக் கொண்டு இவை கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று காலம் கூறப்பட்டுள்ளது. இக்காலத்தில் தகடூர் பகுதியில் பல கோயில்களை புதுப்பித்துக் கட்டியுள்ள இராசராச அதியமானின் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம்.

## பெருங்கற்கால மட்கலங்கள்

தருமபுரி பகுதியில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த வாழ்விடங்களும் பெருங்கற்படை சின்னங்களும் அகழாய்வு செய்யப்பட்டுள்ளன. மோதூர், மயிலாடும்பாறை குட்டூர், தொகரப்பள்ளி போன்றவை குறிப்பிடத்தக்கவை. இக்காலத்தில் நேர்த்தியான மட்கலங்களைச் சக்கரத்தின் உதவியுடன் செய்யத் தெரிந்திருந்தனர் என்பது தெளிவு. இக்காலத்தில் கருப்பு சிவப்பு மட்கலங்கள், சிவப்பு சாயம் பூசப்பட்ட மட்கலங்கள் ஆகியன கிடைக்கின்றன. இவை அனைத்தும் நன்கு சுடப்பட்டுள்ளன.

பல இடங்களில் விவசாயம் செய்யும்போது இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெரிய பானை முதல் மிகச்சிறிய கலயம் வரை அகழ்வைப்பகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. கிண்ணங்கள், மூடிகள், தாங்கிகள், ஜாடிகள், கப் வடிவ மட்கலங்கள், தண்ணீர் சேமிக்கும் சிறிய வாயை உடைய கலயங்கள், குடுவைகள் போன்றன உள்ளன. இவை அனைத்தும் தருமபுரி பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டவை.

இந்த மட்கலங்களுக்கு மயிலாடும்பாறையில் செய்யப்பட்ட அகழாய்வின் அடிப்படையில் காலம் கி.மு. 1000 என்று கணிக்கப்படுகிறது.

சில மட்கலங்களின் வெளிப்பகுதியில் கீறல் குறியீடுகள் காணப்படுகின்றன. இவை மட்கலங்களை சுட்ட பின்னர் கீறி குறியீடுகளைச் செய்துள்ளனர். ஒன்று முதல் இரண்டு குறியீடுகள் இத்தகைய கலயங்களில் காணப்படுகின்றன. இவை குலக் குறியை குறிப்பவையாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

## ஐந்து கால் சாடி

தருமபுரி பகுதியில் பல வகையான பெருங்கற்காலச் சின்னங்கள் காணப்படுகின்றன. இந்த பெருங்கற்படை சின்னங்களில் பல பொருட்கள் வைத்து மூடப்படுகின்றன. இரும்புப் பொருட்கள், விலை உயர்ந்த கல்மணிகள், மட்கலங்கள் போன்றன குறிப்பிடத்த்க்கன. மட்கலங்களில் கருப்பு சிவப்பு மட்கலங்கள், சிவப்பு மட்கலங்கள் அதிக அளவில் கிடைத்துள்ளன. தருமபுரி பகுதியில் கால்களுடன் கூடிய சாடிகள் கிடைத்துள்ளன. இவை பெரும்பாலும் சிவப்பு வண்ணத்தில் உள்ளன. மூன்று கால்கள், ஐந்து கால்களைக் கொண்ட சாடிகள் கிடைத்துள்ளன. இவை குருவிநாயணபள்ளி பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய ஜாடிகள் அகழ்வைப்பகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. ஐந்து கால்களுடன் கூடிய சாடி மற்றும் மூன்று கால் சாடி போன்றவற்றை படையல் பொருளாக வைக்கும் வழக்கத்தை ஒரு குறிப்பிட்ட குழுவைச் சார்ந்தவர்கள் மட்டும் பயன்படுத்தியிருக்கலாம். இத்தகைய ஐந்து கால்களை உடைய சாடிகள் மற்ற இடங்களில் கிடைக்கவில்லை. ஐந்து கால் சாடி 56 செ.மீ. உயரமுடையது. இதன் வெளிப்பகுதியில் சிவப்பு நிற சாயம் பூசப்பட்டுள்ளது.

## இரும்புப் பொருட்கள்

பெருங்கற்படை சின்னங்களில் அதிக அளவில் இரும்பு பொருட்களைப் படையல் பொருட்களாக வைத்துள்ளனர். இவை ஆயுதங்களாகவும், கருவிகளாகவும் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரியவருகின்றது. இக்கருவிகளை விவசாயத் திற்கும் பயன்படுத்தியிருக்க வேண்டும். இவை பெருங்கற்கால மக்களின் இன்றியமையாத தேவையாக இருந்துள்ளது. எனவே இவர்களே இரும்பை உருக்கி எடுத்து ஆயுதங்களைச் செய்யும் தொழில்நுட்பத்தைத் தெரிந்திருந்தனர் என்று கூறலாம். இதனால் இக்காலம் “இரும்புக் காலம்” என்றும் அழைக்கப்படுகின்றது.

கிருட்டிணகிரிக்கு அருகிலுள்ள ஜீனூரிலிருந்த பெருங்கற்படைச் சின்னத்தில் பல இரும்புப் பொருட்கள் கிடைத்துள்ளன. இவை தற்போது அகழ்வைப்பகத்தில் பார்வைக்கு

வைக்கப்பட்டுள்ளன. நீண்ட வாள், கத்தி, ஈட்டியைப் போன்ற அமைப்புடைய கருவி, கூர்வாள், கோடரி போன்றன அவற்றில் சில. பல அகழ்வாய்வுகளில் அம்பு முனைகள் கிடைத்துள்ளன. கிருட்டிணகிரிக்கு அருகிலுள்ள மயிலாடும்பாறையில் சுமார் 20 அம்பு முனைகள் கிடைத்துள்ளன. இவை வில்லின் முனையில் அம்பினைப் பொருத்தி வில்லை எய்வதற்குப் பயன்படுத்தப் பட்டவை. அம்பின் முனையில் வைக்க ஏதுவாக அம்பு முனையின் பகுதி அமைந்துள்ளது. கத்திகள் சிறியது முதல் பெரியது வரை பலவகைகளிலும் பல அளவுகளிலும் காணப்படுகின்றன. இரும்புப் பொருட்கள் தற்காப்பிற்காகவும், வேட்டை யாடுவதற்காகவும், விவசாயம் செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது.

## இராவணன் மரச்சிற்பம்

ஒன்பது தலைகளுடன் காணப்படும் இராவணன் மரச்சிற்பம் ஒன்று அகழ்வைப்பகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுவாக தமிழகத்திலுள்ள கோயில்களில் உற்சவமூர்த்தியை கோயிலைச் சுற்றி கொண்டுவரும்போது வாகனங்களில் வைத்துக் கொண்டுவருவது வழக்கம். இதற்காக கோயில்களில் நந்தி, சிம்மம், மயில், அன்னம் போன்ற பல வாகனங்கள் உள்ளன. சிவபெருமானுக்கு இராவணனும் ஒரு வாகனமாக இருந்தது என்பது சிறப்புடையது. இராவணன் வாகனம் சில கோயில்களில் மட்டும் உள்ளது. இத்தகைய வாகனம் ஒன்று காரிமங்கலத்திலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது.

இராவணன் ஒரு சிவ பக்தன். இவன் நாள்தோறும் சிவனை வழிபடுவது வழக்கம். ஆனால் சிவபெருமானும், பார்வதியும் கைலாயத்தில் அமர்ந்திருந்தனர். இவர்களை அங்கு சென்று வழிபடுவதைவிட கயிலாய மலையை இலங்கைக்குக் கொண்டு வந்துவிடவேண்டும் என்று இராவணன் எண்ணம் கொண்டான். இதனால் இராவணன் கயிலாயத்திற்குச் சென்று கயிலாய மலையை அடியோடு எடுத்துவர முயற்சித்தான். தன்னுடைய வலிமையால் கயிலாய மலையைத் தூக்கும்பொழுது மலை ஆடத் தொடங்கியது. கயிலாய மலையிலிருந்த சிவனும், பார்வதியும்

இதைக் கண்டு அஞ்சினர். பின்னர் சிவபெருமான் தன்னுடைய காலின் பெருவிரலால் கயிலாய மலையை அழுத்தினார். இந்த அழுத்தத்தால் இராவணன் கயிலாய மலையின் அடியில் சிக்கிக்கொண்டான் கயிலாய மலையின் அடியிலிருந்து வெளிவர இயலாத நிலையில் சிவபெருமானை நினைத்து வணங்கி வழிபட முற்பட்டான்.

சிவபெருமான் இராவணனின் வணக்கத்திற்கு மயங்க வில்லை. இராவணன் வீணை வாசிப்பதில் வல்லவன். இவன் தன்னுடைய பத்து தலையில் ஒன்றையும், உடம்பிலிருந்த நரம்பையும் எடுத்து வீணை ஆக்கி அந்த வீணையை வாசிக்க முற்பட்டான். இராவணனின் வீணை இசையில் மயங்கிய சிவபெருமான் கயிலாய மலையை அழுத்துவதை மறந்தார் கயிலாய மலையின் அடியிலிருந்து இராவணன் வெளிவர அருள்புரிந்தார். இதனால் சிவபெருமான் இராவண அனுகிரகமூர்த்தி ஆனார். இதனால் இராவணனும் நந்தியைப் போன்று வாகனமாக மாறினான்.

இத்தகைய செயலால் இராவணனுக்கு பத்து தலைகளுக்குப் பதிலாக ஒன்பது தலைகள் மட்டும் காணப்படுகின்றன. பத்தாவது தலை வீணையின் மேல்பகுதியில் இருக்கின்றது. தருமபுரி அகழ்வைப்பகத்திலுள்ள இராவணனுக்கு ஒன்பது தலைகள் மட்டும் உள்ளன. ஒரு தலை வீணையின் மேல் பகுதியில் உள்ளது. இச்சிற்பம் ஆலிட ஆசன அமைப்பில் இராவணன் உள்ளது போன்று காணப்படுகின்றது. இராவணனின் பின் பகுதியில் மலையின் பகுதிகள் காட்டப்பட்டுள்ளன. இந்த மரச்சிற்பம் கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## விளக்க அட்டைகள்

தொல்பழங்காலம் தொடங்கி ஆங்கிலேயர் காலம் வரையிலான குறிப்பிடத்தக்க விபரங்கள் விளக்க அட்டைகளாக வைக்கப்பட்டுள்ளன. தகடூர் பகுதியை ஆண்ட அரச மரபினர்களின் பட்டியல், பெருங்கற்கால விபரங்கள், தருமபுரி பகுதியிலுள்ள கோட்டைகள், ஆங்கிலேயர்களின் குறிப்பிடத்தக்க செய்திகள் போன்றன குறிப்பிடத்தக்கன.

ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியுடன் வந்த மேஜர் ஜான் குளோவர் என்பவர் இங்கிருந்த ஒரு முகமதியப் பெண்ணை மணந்தார். மனைவி இறந்த பின் அவரின் நினைவாக இராயக் கோட்டையில் கோரி ஒன்றை எடுத்துள்ளார். இந்த விபரங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள், காகித ஆவணங்கள், பீரங்கிகள், பீரங்கி குண்டுகள். சுடுமண்ணால் ஆன பொம்மைகள் போன்ற பல வகையான தொல்பொருட்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

# நிகரிலிசோழ மண்டலத்திலுள்ள நாடுகள்

| வ. எண் | நாட்டின் பெயர் | தற்போதைய வட்டம் |
|---|---|---|
| 1. | தகடூர் நாடு | தருமபுரி பகுதி |
| 2. | கங்க நாடு | தருமபுரி பகுதி |
| 3. | புறமலை நாடு | அரூர் வட்டம் |
| 4. | கோவூர் நாடு | அரூர் வட்டம் |
| | | ஊத்தங்கரை வட்டம் |
| 5. | மீகொன்றை நாடு | அரூர் வட்டம் |
| | | செங்கம் பகுதி |
| 6. | வேணாடு | ஊத்தங்கரை வட்டம் |
| | | செங்கம் பகுதி |
| 7. | பங்கள நாடு | ஊத்தங்கரை வட்டம் |
| 8. | கோயினூர் நாடு | அரூர் வட்டம் |
| | | ஊத்தங்கரை வட்டம் |
| | | செங்கம் |
| 9. | எயில் நாடு | கிருஷ்ணகிரி வட்டம் |
| | | திருப்பத்தூர் வட்டம் |
| 10. | அலைமலைநாடு | அரூர் வட்டம் |
| 11. | புலிகரை நாடு | அரூர் வட்டம் |
| 12. | விரிவு நாடு | கிருஷ்ணகிரி வட்டம் |
| 13. | கடத்தூர் நாடு | அரூர் வட்டம் |
| 14. | வடகரை நாடு | பாரூர் பகுதி |
| 15. | விக்கிரமசோழ நாடு | கிருஷ்ணகிரி வட்டம் |
| 16. | மாசந்தி நாடு | ஓசூர் வட்டம் |
| 17. | நடுவி நாடு | ஓசூர் வட்டம் |
| 18. | மோதூர் நாடு | தருமபுரி வட்டம் |
| 19. | முரசு நாடு | ஓசூர் வட்டம் |
| 20. | அங்கண நாடு | கிருஷ்ணகிரி வட்டம் |
| 21. | மழை நாடு | கிருஷ்ணகிரி வட்டம் |
| 22. | பெரிய நாடு | ஓசூர் வட்டம் |
| 23. | வேளாள நாடு | அரூர் வட்டம் |

## ஆந்திர மாநிலம்

| வ. எண் | நாட்டின் பெயர் | தற்போதைய வட்டம் |
|---|---|---|
| 24. | பூதா நாடு | சித்தூர் பகுதி |
| 25. | அளவாயு நாடு | சித்தூர் பகுதி |
| 26. | கைய்வார நாடு | மாலூர் பகுதி |
| 27. | ஆவனிய நாடு | மாலூர் பகுதி |
| 28. | குவலாலய நாடு | கோலார் பகுதி |
| 29. | சிரை நாடு | ஹேமாவதி பகுதி |

## தகடூர் பகுதியிலுள்ள பற்றுகள்

| வ. எண் | நாட்டின் பெயர் | தற்போதைய வட்டம் |
|---|---|---|
| 1. | ஆனந்தூர் பற்று | ஆனந்தூர் |
| 2. | புளியாழ்வார் பற்று | சிந்தல்பாடி |
| 3. | ஆரப்பூர் பற்று | தாளநத்தம் |
| 4. | புதுப்பற்று | திம்மாபுரம் |
| 5. | தாமலூர் பற்று | கம்பைநல்லூர் |
| 6. | அங்கணப் பற்று | வரட்டணபள்ளி |
| 7. | தென் பற்று | ஊத்தங்கரை |
| 8. | மூக்கனூர் பற்று | கம்பைநல்லூர் |
| 9. | குடில் பற்று | கட்டமடுவு |
| 10. | எருமறை பற்று | மாலூர் |

## நடுகற்கள் உள்ள ஊர்கள்


1. அச்சல்வாடி
2. ஆதனூர்
3. அகலக்கோட்டை
4. பி. அக்கராஹரம்
5. அலேபுரம்
6. ஆனந்தூர்
7. பளிஞ்சரஹள்ளி
8. பைரமங்கலம்
9. பரிகம்
10. பேளூர்
11. பீமாண்டபள்ளி
12. செக்காரப்பட்டி
13. செல்லம்பட்டி
14. சென்னசந்திரம்
15. சிந்தல்பாடி
16. சின்னகுப்பம்
17. சின்னகொத்தூர்
18. தேவர்முக்குளம்
19. இலவம்பாடி
20. ஏடுபள்ளி
21. கங்கதேவனஅஸ்தி
22. கொங்காவரம்
23. அலமேலுபுரம்
24. இண்டூர்
25. இருளப்பாடி
26. இகலாவரம்
27. கண்ணப்பனூர்
28. கண்ணிவாடி
29. கருபையன அள்ளி
30. கதிரம்பட்டி
31. கலித்தாகுப்பம்
32. கெரகேடஅள்ளி
33. கோபுரப்பள்ளி
34. கொளகத்தூர்
35. கொண்டல்மடுவு
36. கொண்டாம்பட்டி
37. கோறையாறு
38. கூச்சுக்கல்பட்டி
39. குட்டப்பட்டி
40. கூக்கடப்பட்டி
41. குமளாபுரம்
42. குப்புசெட்டிபட்டி
43. குறும்பட்டி
44. மேக்கனூர்
45. மெனசி
46. மெய்யாண்டிபட்டி
47. மிண்டிகிரி
48. மோதூர்
49. மொண்டுகுழி
50. மோட்டூர்
51. மூக்கனூர்
52. முண்டச்சிக்கல்
53. முத்தானூர்
54. நதியனூர்
55. நடுச்சேரி
56. நடுப்பட்டி
57. நாகமங்கலம்
58. நாகொண்டபாளையம்

59. நரிப்பள்ளி
60. நத்தம்பட்டி
61. நவலை
62. நட்டப்பட்டி
63. நட்டப்பதி
64. பரிகம்
65. பாலவாடி
66. பனைகுளம்
67. பண்டப்பட்டி
68. பாப்பாரப்பட்டி
69. பாராந்தூர்
70. பெத்தலபள்ளி
71. பெண்ணேஸ்வரமடம்
72. புளியனூர்வனம்
73. புளியனூர்
74. ராஜகொல்லப்பள்ளி
75. ராமகிருஷ்ணம்பதி
76. ரெட்டிவலசு
77. சந்தூர்
78. சந்தம்பட்டி
79. தட்டக்கல்
80. செட்டிபாளையம்
81. சிவம்பட்டி
82. சூலகிரி
83. தாளாபள்ளம்
84. தவளம்
85. தெமிஜபள்ளி
86. திண்ணஅள்ளி
87. திப்பம்பட்டி
88. தொகரப்பள்ளி
89. வரசந்திரம்
90. வரதம்பட்டி
91. வெள்ளாளப்பட்டி
92. வெங்கடாபுரம்
93. வலசிகானூர்
94. கக்கன்புரம்
95. கல்லகுறி
96. மகாராஜகடை
97. எலத்தகிரி
98. கல்லாவி
99. பெரும்பாலை
100. செல்லம்பட்டி
101. கிருஷ்ணகிரி
102. N.தட்டக்கல்


# நிழற்படங்கள்



பனையகுளம், நடுகல், கி.பி. 6-ஆம் நூற்றாண்டு



சமண சிற்பம், தருமபுரி, கி.பி. 800 நூற்றாண்டு



புத்தர், கடகத்தூர், கி.பி. 10-ஆம் நூற்றாண்டு




பேழை, பெருங்கற்காலம், ஜுனூர், கி.மு. 1000




கருப்பு - சிவப்பு மட்கலன்கள், பெருங்கற்காலம் கி.மு. 1000



அகல்விளக்கு, சந்திரகிரி, கி.பி. 15-ஆம் நூற்றாண்டு



கல்திட்டை, வரமணகுண்டா, கி.மு. 1000





நடுகல், சந்தூர், கி.பி. 8-ஆம் நூற்றாண்டு




நடுகல், கொளகத்தூர், கி.பி. 7-ஆம் நூற்றாண்டு

இரும்பு ஆயுதங்கள், பெருங்கற்காலம், கி.மு. 1000







நடுகல், சந்தூர், கி.பி. 8-ஆம் நூற்றாண்டு